# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ்:3 • 16.12.2018

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்




## மன்னார் மனிதப் புதைகுழி : மனித உரிமை அமைப்புக்கள் மௌனம் காப்பது ஏன்?

## தேசியத் தலைவர் காலத்தில் தமிழினத்தின் கல்வி சிறப்புற்றுக் காணப்பட்டது!

பாராளுமன்ற உறுப்பினர் பெருமிதம்





## இலங்கை படைகள் நிலைகொண்டுள்ள முகாம்கள் அனைத்தும் சர்வதேச கண்காணிப்புடன் அகழப்படவேண்டும்!

அனந்தி சசிதரன் சிறப்புப் பேட்டி

## இராணுவத்தில் பெண்களை அனுமதிக்க முடியாது!

இந்திய ராணுவத் தளபதி கருத்தால் சச்சரவு!



# மன்னார் மனிதப்புதைகுழியிலிருந்து மேலும் பல உடல்கள் மீட்கப்படலாம்

## தடயவியல் பேராசிரியர் ராஜ்சோமதேவ்

மன்னாரில் மனித புதைகுழியிலிருந்து இன்னும் பல உடல்கள் மீட்கப்படலாம் என அகழ்வுபணியில் ஈடுபட்டுள்ள தடயவியல் பேராசிரியர் ராஜ்சோமதேவ் தெரிவித்துள்ளார். பிரிட்டனின் இணைய செய்தித்தாள் இன்டிபென்டன்ட்டிற்கு அவர் இதனை தெரிவித்துள்ளார்.



இதேவேளை மன்னார் புதைகுழிக்குள் காணப்படுவது ஒரு சமூகம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். மன்னார் புதைகுழியே இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனித புதைகுழி என பேராசிரியர் ராஜ்சோமதேவ தெரிவித்துள்ளார். நாங்கள் இதுவரை 70 வீதமான புதைகுழியையே அகழ்வு செய்திருக்கின்றோம் என தெரிவித்துள்ள அவர் இதன் காரணமாக மீட்கப்படவுள்ள உடல்களின் எண்ணிக்கை அதிகமாகயிருக்கலாம் என குறிப்பிட்டுள்ளார். கால்கள் இரும்புகம்பிகளால் பிணைக்கப்பட்டுள்ள நிலையில் உடல்கள் மீட்கப்பட்டுள்ளமை மனித புதைகுழியில் உள்ள உடல்களிற்கு என்ன நடந்தது என்ற கேள்வியை எழுப்பியுள்ளது என இன்டிபென்டன்ட் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 7ம் பக்கம்...

# இதுவரை 50க்கும் அதிகமான முன்னாள் போராளிகள் இரகசியமாக விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்

## ஜனநாயகப் போராளிகளின் பொதுச் செயலாளர்

ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதிக்கு பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலமையில் அதன் விளைவுகள் தமிழர் வாழ் இடப்பகுதிகளுக்கு ஏற்படுட்டுள்ள நிலைமைகள் குறித்து ஜனநாயக போராளிகள் கட்சியின் பொது செயலாளர் இ.கதிர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார். தமிழர் தாயக பகுதியில் அண்மையில் ஏற்பட்ட பிரச்சனையில் தொடர்ந்து ஜனநாயக நீரோட்டத்தில் பணியாற்றும் முன்னாள் போராளிகள் மீது இலங்கையின் புலனாய்வுத்துறையினர் மேற்கொள்கின்ற அடாவடிகள் அச்சுறுத்தல்கள் அண்மையில் தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் நிலைமைகளும் அதற்கு பின்னர் தென்னிலங்கையில் உள்ள அரசியல் வாதிகளினால் ஏவிவிடப்பட்ட சில தரப்புக்களினால் கிழக்கு மாகாணத்தில் வவுணதீவில் ஏற்பட்ட சம்பவம் நாட்டு மக்களுக்கு அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது.

எமது மக்களுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் மேற்படி விடயம் தொடர்பில் முழுமையான விளக்கம் இன்னும் அரசாங்கத்தினால் அளிக்கப்படவில்லை. இதன் தொடர்ச்சியாக முன்னாள் போராளிகள் நேரடியாக விசாரணைக்கு அழைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட போதிலும் மறைமுகமாக இதுவரை 50ற்கு மேற்பட்ட விசாரணைக்கு அழைக்கப்பட்டதும் சிலர் தொலைபேசியில் அச்சுறுத்தப்பட்டதும் எமது கட்சிக்கு மிகப்பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்துவதாகவே நாம் உணர்கிறோம். இதன் அடிப்படையிலேயே ஊடகபேச்சாளர் துளசி அவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி பயங்கரவா குற்றத்தடுப்பு பிரிவின் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். இது மிகமோசமான ஜனநாயகத்தினை அத்துமீறும் செயல் எமது செயற்பாடுகளின் முடக்கும் செயலாக நாங்கள் கருது கின்றோம்.

இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற ஜனநாயகம் என்ற பதம் அதனை ஏற்கமுடியாது சிங்கள மக்களுக்குமட்டும்தான் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டுள்ளதே யதார்த்தம் ஆகும். தமிழர் தாயகத்தில் அது இல்லை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் ஜனநாயகத்தினை நிலைநிறுத்திக்கொண்டிருக்கின்றோம் என்று இப்போதும் கூறிக்கொண்டிருக்கின்றார்கள் என்றால் அதற்கும் விடுதலைப்புலிகள்தான் காரணம். ஒட்டுமொத்தமாக விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்தேசியக்கூட்டமைப்பின் ஆதரவினை பயன்படுத்தித்தான் இலங்கையில் ஜனநாயகத்தினை நிலைநிறுத்தி இருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை.

ஜனநாயகத்தின் கதாநாயகர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள்தான் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் ஆதரவினை பயன்படுத்தி இலங்கையில் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் அந்த ஜனநாயக வாதிகளை தொடர்ந்து பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப்பிரிவிற்குள் விசாரணைக்கு அழைப்பது என்பது ஜனநாயக அத்துமீறல். தென்னிலங்கையில் ஜனநாயகத்தினை நிலைநிறுத்தவேண்டும் என்று போராடிக்கொண்டிருக்கும் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் சம்மந்தன் ஐயாவும் இதனை கருத்தில் கொள்ளவேண்டும். தமிழர்கள் செறிந்துவாழும் தாயக பகுதியில் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது இதனை மீட்பதற்க சம்மந்தன் ஐயா

தொடர்ச்சி 5ம் பக்கம்...

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

# மன்னார் மனிதப் புதைகுழி மர்மங்கள்

மன்னார் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி மர்மம் அச்சமளிக்கும் வகையில் தொடர்ந்துகொண்டு செல்கின்றது. இதுவரையில் 270 க்கும் அதிகமான சடலங்கள் — மனித எச்சங்கள் அங்கிருந்து மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் இருபதுக்கும் அதிகமானவை சிறுவர்கள் என்பதோடு கால்களில் இரும்புச் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் மனித எச்சங்கள் காணப்பட்டது தமிழ் மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. இவ்விடத்தில் அரசியல் தலைமைகளும் சிவில் இயக்கங்களும் போதிய கவனம் செலுத்தவில்லை என்று தமிழ் மக்கள் மத்தியில் ஆதங்கம் உருவாகியுள்ளது.

மன்னாரில் நகரப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியில் அதிக சடலங்கள் மீட்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். தடயவியல் நிபுணர்களின் கருத்தின்படி இதற்கு மேலும் சடலங்கள் இருக்கலாம். அதனால் இந்த புதைகுழியைத் தோண்டும் பணி மேலும் சில மாதங்களுக்கு தொடர வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்றும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த மனிதப் புதைகுழி தொடர்பில் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு கேள்விகளை எழுப்பி இருக்கிறது. இந்தப் புதைகுழி எந்த காலத்துக்கு உரியது என்பதோ கொல்லப்பட்டவர்கள் யார் என்பதோ இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. கிடைக்கப்பெற்ற சில ஆதாரங்களின் அடிப்படையில் இதற்குரிய காரணம் குறிப்பிடப்பட்டாலும் கூட அது தெளிவாக உறுதிப்படுத்தக் கூடிய ஒன்றாக இல்லை. இதனால் சர்வதேச தடயவியல் நிபுணர்களின் ஆதரவுடன் ஆய்வுகள் செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொகை மிகவும் அதிகமாக உள்ள நாடுகளில் ஒன்றாக இருக்கின்றது. இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சனை அண்மைக்காலத்தில் உருவாகிய ஒன்றல்ல. போர் ஆரம்பமாகிய காலப் பகுதியிலேயே பொலிசாராலும் ஆயுதப் படையினரால் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைதுசெய்யப்பட்ட பலர் காணாமல் போகச் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதனால் மன்னார் புதைகுழி எந்த காலகட்டத்தில் மக்களைப் புதைப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் இதற்கு காரணமாக இருந்தவர்கள் யார் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டு நீதி வெளிப்படுத்தப்படுவது அவசியமாகும். இலங்கைப் பிரச்சினை இப்போது வெறுமனே ஒரு உள்நாட்டுப் பிரச்சினை என்பதற்கு அப்பால் ஒரு சர்வதேச விவகாரமாகவும் மாறி இருக்கின்றது. இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புக்கும் இறுதி யுத்தத்தில் நடைபெற்ற படுகொலைகளுக்கும் இதுவரை நீதி கிடைக்கவில்லை.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கை தொடர்பான விவகாரம் ஆராயப்படும்போது மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பாகவும் கவனம் செலுத்துவது அவசியமாகும். பொறுப்புக்கூறல் விடயத்திற்காக இலங்கை அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் முடிவுக்கு வருகின்றது இந்த நிலமையில் மன்னார் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதும் அதற்குள்ளிருந்து 270க்கும் அதிகமான மனித எச்சங்கள் சர்வதேசத்தின் கவனத்திற்குரிய ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆக இந்த விவகாரம் இப்போது சர்வதேசத்தின் கவனத்தை கூடிய ஒன்றாக மாற்றப்பட வேண்டிய தேவை இருக்கின்றது என்பது முக்கியமாகும். கொல்லப்பட்டவர்கள் யார் என்பது கண்டுபிடிக்கப்படுவதுடன் அதற்கான நீதியும் வழங்கப்படுவது அவசியமாகும். ஜெனிவா கூட்டத் தொடரிலும் சர்வதேச அரங்கிலும் மனித உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கும் அமைப்புகள் தாயகத்தில் வெளிக்கிளம்பியுள்ள மனிதப் புதைகுழிகள் தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

இலங்கையின் நீதித்துறையில் நீண்டகாலமாக நம்பிக்கை இழந்த தமிழ் மக்கள் மனிதப் புதைகுழி விடயத்திலும் நீதி வெளிவரும் என்பதில் நம்பிக்கை இழந்துள்ளனர். இதனால் சர்வதேச சமூகத்தின் தலையீட்டின் மூலமே உண்மை நிலைமையை வெளிக்கொண்டுவர முடியும்.

# மன்னார் மனிதப் புதைகுழி : மனித உரிமை அமைப்புக்கள் மௌனம் காப்பது ஏன்?

**பி.மாணிக்கவாசகம்**

இலங்கையிலேயே அதிகூடிய மனித எலும்புக்கூடுகளும், மனித எச்சங்களும் கொண்ட புதைகுழிகளில் மன்னார் புதைகுழியும் ஒன்றாகத் திகழ்கிறது. மன்னார் நகரின் மையப்பகுதியில் பிரதான வீதிக்கருகில் அமைந்திருந்த கூட்டுறவு மொத்த விற்பனை கட்டிட வளகத்திற்குள் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி வரையில் 276 மனித எலும்புக்கூடுகளும் எச்சங்களும் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக தடயவியல் நிபுணராகிய ராஜ் சோமதேவ் தெரிவித்துள்ளார். இந்த மனிதப் புதைகுழி மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைவாக 117 ஆவது தினமாக கடந்த புதன்கிழமை தோண்டப்பட்டது வரையில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் 21 சிறுவர்களின் எலும்புக்கூடுகளும் அடங்குவதாக அவர் கூறியுள்ளார். சதொச என்றழைக்கப்படுகின்ற கூட்டுறவு விற்பனை நிலையத்தின் மன்னார்; கிளையின் வளவுக்குள் அமைந்துள்ள பழைய கட்டிடத்திற்குப் பதிலாகப் புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான அத்திவாரம் தோண்டப்பட்டபோது, அதில் மனித எலும்புகள் கண்டறியப்பட்டது. நகர மத்தியில் கட்டிடங்கள் நெருக்கமாக அமைந்துள்ள பகுதியில் தோண்டப்பட்ட சதொச கட்டிடப் பகுதியில் இருந்த மண் பல்வேறு தேவைகளுக்காகவும் பலராலும் வெளியில் கொண்டு செல்லப்பட்டது. அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட மண் குவியலில் மனித எலும்புகள் இருப்பதைக் கண்ட ஒருவர் அது குறித்து பொலிசாருக்கு முறையிட்டிருந்தார்.

அதனையடுத்து அங்கு சென்று அந்த மண்ணைப் பரிசீலனை செய்த பொலிசார் அந்தப் பகுதிக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்து, நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர். இதனையடுத்து நீதிமன்றம் வழங்கிய உத்தரவைத் தொடர்ந்து, மார்ச் மாதம் 28 ஆம் திகதி அகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 'மன்னார் நீதிமன்றத்தின் பி232ஃ2018 ஆம் இலக்கம் கொண்ட வழக்குடன் சம்பந்தப்பட்ட, கட்டிட நிர்மாணப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட சதொச பூமியில் மண் அகழ்வு செய்யும்போது, மனித எச்சங்கள் சில காணப்பட்டதுடன், அது சம்பந்தமான நிபுணர்களின் மதிப்பறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக நீதிமன்ற அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அகழ்வுப் பணியில் பொலிசாரின் உதவியுடன், தடயவியல் நிபுணர் ராஜ் சோமதேவ, சட்ட வைத்திய சமிந்த ராஜபக்ச ஆகியோரின் வழிநடத்தலில் மன்னார் மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. தோண்டத் தோண்ட நாள்தோறும் இந்த புதைகுழியில் இருந்து வெளி வந்து கொண்டிருக்கின்ற மனித எலும்புகள், மண்டையோடுகள் மற்றும் மனித எச்சங்கள் பல்வேறு சந்தேகங்களையும், கேள்விகளையும் பல மட்டங்களிலும் எழுப்பியிருக்கின்றன. மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது மனிதப் புதைகுழியாகவும், இதுவரையில் தோண்டப்பட்ட மனிதப் புதைகுழிகளில் எண்ணிக்கையில் அதிகூடிய மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடமாகவும் இந்த மன்னார் சதொச கட்டிட மனிதப் புதைகுழி காணப்படுகின்றது. சதொச கட்டிடம் அமைந்திருந்த வளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த புதைகுழியில் இன்னும்பெரும்பகுதியான இடத்தில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இந்த அகழ்வுப் பணிகளுக்குப் பொறுப்பான துறைசார்ந்த அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். இரண்டு விதமான முறையில் இங்கு எலும்புக்கூடுகள் இருப்பது அவதானிக்கப்பட்டிருக்கின்றன. முறையான உடல்கள் அடக்கம் செய்யப்பட்டவாறாகவும், ஒழுங்கற்ற முறையில் குறுக்கும் நெடுக்குமான முறையிலும் எலும்புக்கூடுகள் காணப்படுகின்றன என்று தொல்லியல் தடயவியல் நிபுணர் கூறியுள்ளார்.

முறையற்ற வகையில் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பியிருக்கின்றன. ஆயினும் இதுவரையில் இந்த எலும்புக்கூடுகள் எவ்வாறு இந்த இடத்திற்கு வந்தன என்பது பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரையில் வெளியாகவில்லை. இந்த காணப்படுகின்ற 21 சிறுவர்களின் எலும்புக் கூடுகளும் காணப்படுகின்றன என்பது, இங்கு கொல்லப்பட்டவர்கள் குடும்பங்களாக, சமூக நிலையில் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது. மன்னாரில் நகரப் பகுதியில் தற்போது மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதற்கு முன்னதாக, கடந்த 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கருகில் ஒரு மனிதப் புதைகுழியொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

ஆலயத்திற்கருகில் உள்ள வீதியொன்றில் குழாய்களைப் பதிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் அந்த மண்ணில் மனித எலும்புகளைக் கண்டுபிடித்திருந்தனர். இதனால், அந்தப் பகுதியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக புலனாய்வு நடவடிக்கைகளுக்காக அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சட்ட வைத்திய நிபுணர் தனஞ்சய வைத்தியரட்னவின் தலைமையில் 37 சதுர மீற்றர் இடப்பரப்பில் 5 மீற்றர் ஆழத்தில் இங்கு அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. அப்போது 96 மனித எலும்புக்கூடுகள், கண்டுபிடிக்கப்பட்டு, புலனாய்வு நடவடிக்கைகளுக்காக அனுராதாபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த இடம் முன்னர் ஓர் இடுகாடாகப் பயன்படுத்தப்பட்டதாகவும், இந்தப் பிரதேச மக்கள் இறந்தவர்களை அங்கு புதைத்ததாகவும் பொலிஸ் தரப்பிலும், அகழ்வுப் பணியில் பங்கேற்றிருந்த தொல்லியல் திணைக்களத்தினரும் தெரிவித்திருந்தனர். ஆயினும் நீதிமன்ற விசாரணைகளின்போது, திருக்கேதீஸ்வரம் பகுதிக்குப் பொறுப்பான பிரதேச சபையினர் அந்தப் பகுதியில் இடுகாடு எதுவும் இருக்கவில்லை என்றும் அவ்வாறு இருந்ததற்கான பதிவுகளோ, ஆவணங்களோ இல்லையென்றும் தெரிவிததிருந்தனர். ஆயினும் தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகள் அங்கு முன்னெடுக்கப்பட்டு விசாரணைகளும் முடுக்கிவிடப்பட்டன. நீதிமன்ற விசாரணைகளும் தொடர்ந்தன. ஒரு கட்டத்தின் பின்னர் அகழ்வுப் பணிகள் அவசியமில்லை என்ற காரணத்திற்காக நிறுத்தப்பட்டன. ஆனால நீதிமன்ற விசாரணைகள் முற்றுப் பெறவில்லை. இன்னும் தொடர்கின்றன. ஆயினும் அங்கு கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் யாருடையது, அவர்கள் எவ்வாறு இறந்தார்கள் என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. இந்த நிலையில்தான் மன்னார் நகரப்பகுதியில் இரண்டாவதும் இலங்கையிலேயே பெரியதுமான சதொச கட்டிட மனிதப் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டு அகழ்வுப்



**இராணுவ சோதனைச்சாவடியைக் கடந்து சென்றவர்கள் பலர் காணாமல் போயுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்புக்கள் தெரிவித்திருக்கின்றன.**

மனித எலும்புக்கூடுகளுக்கு உரியவர்கள் யார், அவர்களுடைய மரணம் எவ்வாறு சம்பவித்தது, அந்த மரணங்களுக்குக் காரணம் என்ன என்பது போன்ற வினாக்களுக்கு இதுவரையில் விடைகள் எதுவும் கிடைக்கவில்லை. கடந்த வாரம் கால் எலும்புகள் இரும்புக் கம்பியில் கட்டப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டிருப்பதாகவும், அத்துடன் பெண்களுடைய எலும்புக்கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக, தடயவியல் நிபுணர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார். இதேபோன்றவேறு இரண்டொருதடயங்களும் அகழ்வாய்வின்போது வெளிவந்ததாகக் கூறிய அவர் அதுபற்றிய விபரங்கள் எதனையும் வெளியிடவில்லை. அதேவேளை, இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டவற்றில்

தொடர்ச்சி...7ம் பக்கம்

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் மீண்டும் ரணில்

பூமிகன்

கொழும்பு அரசியலில் 50 நாட்களாகத் தொடர்ந்த நெருக்கடி மீண்டும் ஆரம்பித்த இடத்துக்கு வந்தே முடிவுக்கு வருகின்றது. அக்டோபர் 26 இல் திடீர்ப் பிரதமராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ, தான் “வகிக்காத” பதவியை சனிக்கிழமை ராஜீனாமா செய்தார். ரணில் விக்கிரமசிங்க ஞாயிறு மீண்டும் பிரதமராகப் பதவியேற்கிறார். ரணில் தொடர்பில் தனது கடுமையான நிலைப்பாட்டைத் தளர்த்திக்கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

ரணிலுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரேரணை கொண்டுவரப் படுவதைத் தடுப்பதற்கு அல்லது அதனைத் தோற்கடிப்பதற்கு இறுதி நிமிடம் வரையில் ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இரண்டு முனைகளில் இதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டது. ரணில் மீது வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வது முதலாவது. த.தே.கூ.ஐ நடுநிலை வகிக்கச் செய்வது இரண்டாவது. கூட்டமைப்பை வழிக்குக் கொண்டுவருவதற்கான



முயற்சியை மைத்திரி தன்னுடைய கைகளிலேயே எடுத்திருந்தார்.

பாராளுமன்ற சம நிலையில் கூட்டமைப்பின் நிலைப்பாடுதான் தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. ரணில் விடயத்தில் கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கும் என்பது முன்னரே உறுதியாகத் தெரிந்திருந்தது. அவ்வாறான நிலையிலும், ரணில் விடயத்தில் நடுநிலை வகிக்குமாறு வலியுறுத்துவதற்குத்தான் சம்பந்தனுடன் ஜனாதிபதி பேசினார். கூட்டமைப்பு நடு நிலை வகித்தால் ரணிலுக்கு ஆதரவாக 103 வாக்குகள்தான் கிடைக்கும். அதன்மூலம் பிரேரணையை நிறைவேற்ற முடியாது போய்விடும்.

இந்த எதிர்பார்ப் புடன்தான் சம்பந்தனுடன் மைத்திரி தொடர்பு கொண்டார். கூட்டமைப்பை வழிக்குக் கொண்டுவருவதற்கு அரசியல் கைதிகள் விவகாரத்தையும் பயன்படுத்தவும் அவர்கள் முற் பட்டார்கள். அங்கஜனுடன் நாமல் ராஜபக்ஷ வெலிக்கடை சென்று கைதிகளைப் பார்வை யிட்டார். அவசரமாக கைதிகள் விடுதலைக்காக என ஒரு குழு அமைக்கப்பட்டது.

கைதிகள் மூலமாகவும் கூட்டமைப்பின் தலைமைக்கு அழுத்தம் கொடுக்க எடுக்க முயற்சிகள் பிசுபிசுத்துப்போனது. இந்தநிலையில் புதன்கிழமை காலை பாராளுமன்றம் செல்வதற்கு முன்னதாக ஜனாதிபதியை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேரில் சென்று சந்தித்த சம்பந்தன், தன்னுடைய முடிவை உறுதியாகத் தெரிவித்தார். சம்பந்தனுடன் மாவை சேனாதிராஜாவும், த.சித்தார்த்தனும் சென்றிருந் தார்கள். இதன்போதும்



கூட்டமைப்பு நடுநிலை வகிக்க வேண்டும் என மைத்திரி வலியுறுத்தினார். ஆனால், “இந்த விடயத்தில் நாங்கள் உங்களுக்கு உதவ முடியாத நிலையில் இருக்கின்றோம்“ என நிலைமையை விளக்கிய சம்பந்தன், அங்கிருந்து பாராளுமன்றத்துக்குப் புறப்பட்டார். சம்பந்தனின் பதில் அரசியலில் தனது பிடிகள் கையை விட்டுச் செல்கிறது என்பதை ஜனாதிபதிக்குத் தெளிவாக உணர்த்தியது.

ரணில்தான் பிரதமர் என்பதில் ஐ.தே.மு. உறுதியாக இருந்தது. மறுபுறத்தில் ரணிலுக்கு இடமளிப்பதில்லை என்பதை மைத்திரி உறுதியாகச் சொல்லிக் கொண்டிருந்தார். இந்த நிலையில் மகிந்த அரசு மீதான இடைக்காலத் தடையையை உயர் நீதிமன்றமும் உறுதிப்படுத்தித் தீர்ப்பளித்து விட்டது. இதனால், மகிந்த ராஜினாமா செய்ய வேண்டியது தவிர்க்க முடியாததாகியது. இந்த நிலையில் இரு தரப்பினரும் தமது பிடியைத் தளர்த்தாவிட்டால், நாடு கடுமையான நெருக்கடிக்குள் செல்லும் என்பதும், குழப்பங்கள் தொடரும் என்பதும் தெளிவாகியது. இந்தப் பின்னணியில்தான் சபாநாயகர் கரு ஜயசூரிய முக்கியமான காய்நகர்த்தல் ஒன்றை வியாழக்கிழமை இரவு மேற்கொண்டார். நள்ளிரவில் ரணில், கரு ஆகியோர் ஜனாதிபதியின் வாஸஸ்தலம் வந்தார்கள். ஜனாதிபதியுடனான அவர்களுடைய ஒரு மணி நேரம் சந்திப்பு நீடித்தது. 50 நாட்களாகத் தொடர்ந்த நெருக்கடிக்கு முடிவைக்கொண்டுவருவதாக அந்தச் சந்திப்பு அமைந்தது. ரணிலை மீண்டும் பிரதமராக நியமிக்க இதன்போதுதான் மைத்திரி இணங்கினார். திடீர்ப் பிரதமரான மகிந்த அரசுக்கு எதிராக 3 தடவை கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை, ரணிலுக்கு ஆதரவாகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கைப்

தொடர்ச்சி 5ம் பக்கம்

# கொழும்பில் அரசியல் நெருக்கடிக்கு மத்தியிலும் தமிழர் தாயகத்தில் பௌத்த மயமாக்கல் தீவிரம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை பிரதேசத்தில் நீராவியடி ஏற்றத்தில் பல நெடுங்காலமாக பிள்ளையார் ஆலயம் இருந்தது. இந்த ஆலய வளாகத்தில் தற்போது பாரிய புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டு திறப்பதற்கான அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படுகிறது

இவ்விடயம் பற்றி அங்குள்ள மக்கள் கருத்து தெரிவிக்மகையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை பிரதேசத்தில் நீராவியடி ஏற்றத்தில் தங்கள் மூதாதையர் வாழ்ந்த காலம் முதல் இறுதி யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்து செல்லும் வரை பல நெடுங்காலமாக பிள்ளையார் ஆலயம் தங்களால் வழிபடப்பட்டு வந்ததாக கவலையுடன் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களின் பின்னர் மீள்குடியேறியபோது குறித்த ஆலய சூழலில் பாரிய இராணுவ முகாம் காணப்பட்டமையால் குறித்த பகுதிக்கு மக்கள் அச்சம் காரணமாக ஆலயத்துக்கு செல்லமுடியாத சூழல் இருந்தது. இந்நிலையில் 2013 ம் ஆண்டு மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் மருதானையை சேர்ந்த கொலம்ப மேதாலங்க தேரர் அவர்கள் குறித்த நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தை ஆலயத்துக்கு அருகில் இருந்த இராணுவத்தினரது உதவியோடு ஆக்கிரமித்து குறித்த ஆலய வளாகத்தில் சிறிய கூடாரம் ஒன்றை நிர்மாணித்து அங்கு குடியேறிக் கொண்டார். அதன்பின்னர் குறித்த பகுதியை தொல்பொருள் பிரதேசமாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் குறித்த பகுதியை சரியான பெயர்கூட இல்லாது செம்மலையை



செட்டிமலை என்ற பெயருடன் வர்த்த மானியில் வெளியிட்டது. குறித்த பகுதியே செட்டிமலை என வாதிட்டு அந்த இடத்தில் விகாரைகளை நிர்மாணித்து வந்துள்ளார். மக்களது எதிர்ப்புக்கள் எல்லாவற்றையும் தாண்டி இந்த இடத்தை அபிவிருத்தி செய்தவர் 2015 ஆட்சிமாற்றத்தின் பின்னர் பாரிய அளவில் எந்த ஒரு கட்டுமானப்பணிக்கும் இடமளிக்காது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மக்கள் மேற்கொண்டுவந்த நிலையில் அண்மையில் மகிந்த ராஜபக்ச பிரதமராக அறிவிக்கப்பட்டவுடன் குறித்த பகுதியில் பாரிய புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டு தற்போது அதனுடைய அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்று அதனை திறப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது.

இவ்விடயம் குறித்து நேற்று தமிழர் மரபுரிமைப் பேரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தனர். அதில். ஆட்சிக் குழப்ப நிலை முடிவுக்கு வந்த நிலையில், தமிழ் மக்களின் மரபுரிமையைச் சிதைக்க மேற்கொள்ளப்படும் இத்திட்டமிட்ட செயற்பாடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த தமிழ்மக்கள் பிரதிநிதிகள் விரைந்து செயற்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அரசுக்கு காத்திரமான அழுத்தத்தினைக் கொடுப்பதனூடாக திட்ட மிடப்பட்ட பௌத்தமயமாக்கலைத் தடுத்து நிறுத்த முன்வருமாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசத்தின் குரலுக்கு தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் அஞ்சலி

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியரும் தமிழினத்தின் ஒப்பற்ற மூத்த இராச தந்திரியுமான தேசத்தின் குரல் அன்டன்பாலசிங்கம் அவர்களின் 12ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழர் தாயகத்தின் புலம் பெயர்ந்த நாடுகளிலும் உணர்வுப் பூர்வமாகக் கடைபிடிக்கப் பட்டது. தாயகத்திலே யாழ் பல் கலைக்கழகத்தில் இடம் பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்களும் பேராசிரியர்களும் தமிழ்த்தேசிய உணர்வாளர்களும் தேசத்தின் குரலுக்கு அஞ்சலி செலுத்திய தோடு அன்டன் பாலசிங்கம் அவர்களின் அரசியல் ஆளுமை குறித்தும் தமிழர்களின் தற் போதைய நிலை குறித்தும் உரையாற்றினார்கள். மேலும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட தலைமைச் செயலகத்திலும் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்திலும் முன்னாள் போராளிகள் கூட்டமைப்பின் அலுவலகத்திலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திலும் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுப்பூர்வமாக நடைபெற்றது.









## தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் பற்றி தேசியத் தலைவரின் உள்ளத்திலிருந்து...



**விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் ஒரு மூத்த தலைமகனாக பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்றுசேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன்.**

# மன்னார் புதைகுழியிலிருந்து...அம்மாவுக்குப் பக்கத்தில் உறங்கவிடுங்கள்...

வீதியில் ஒளிச்சுப் பிடிச்சி..
விளையாடியவர்களும்..
அம்மாவின் பக்கத்தில்
உறங்கிக் கொண்டு இருந்தவர்களும்.
ஆமிக்காரர்..
ஊரடங்கு சட்டம் போட்டு..
தலையாட்டிகளைக் கொண்டு..
தலையாட்ட வைத்து.. இங்கே..
தள்ளிக் கொண்டு வந்தவர்கள்..
பின்னால்...
மூக்கு சிந்த அழுது கொண்டு
வந்த..பச்சிளம் குழந்தைகள்..
நாங்கள்.

அம்மா பாப்பா குடிச்சுக் கொண்டு..
இருந்த நான் அம்மாவை ஆமி..
இழுத்துக் கொண்டு...
போகும்போது...
அம்மாவுக்கு பிறத்தால
அழுது கொண்டு வந்தவன்
நான்...ஓடுத்திரிஞ்ச எங்களை
ஓரிடத்தில் இருக்கச் செய்தீர்கள்.
ஆணையும் பெண்ணையும்
பிரித்தார்கள்
அவர்களை என் கண் முன்னே
அடித்தார்கள்.
எங்களில் எல்லோரும் அழுதோம்.
ஒரு சிலர் மூத்திரத்தால் குளித்தோம்..
ஒருபுறம் மனித சித்திரவதை..
மறுபுறம் பெருங்குழி தோண்டல்.

அழுத கண்கள் வீங்கி..
அடிக் குரல்வளை ஈரம் தேட..
யாரிடம் தண்ணீர் கேட்பது..
அப்போதும் அம்மா தண்ணி..
உதடு மெல்லெனவோ சொல்ல.

வத்துறு ஒன..மே பலன்ட பொன்ட..
கடலைக் காட்டியது காக்கிச் சட்டை.
காரிருள் சூழ காக்கிகளின் துப்பாக்கி
சடசடக்க...
அவலக்குரல் அரங்கேற
வெட்டிய புதை குழி..
உப்பியே படியே..நிறைந்தது..

எங்களையும் சுட்டது வெட்டியது.
அப்படியே..
வெட்டிய குழிக்குள் தள்ளியது..
அம்மா அம்மா கூக்குரல் ஒலிக்கவே..
எம்மால் முடிந்தது..



இரத்தமும் சதையும் சேறும்
சகதியுமாய்..
அம்மாவைத் தேடியது மனசு..
அப்போதும் என் அம்மாவின் அழுகுரல்
எங்கோ கேட்டது..

அது அம்மாவின் குரல் தான்
என்னை தாலாட்டும் போது..
கேட்ட அதே குரல்..இப்போ..
ஈனஸ்வரமாய்...சேடம் இழுக்கும்..
என் அம்மாவின் குரல்...

ஒரே நேரத்தில் இருவரும் கத்தினோம்
அது எந்த
இறைவனுக்கும் இதுவரை கேட்காதது...
எத்தனையாவது அதிசயமோ..
எனக்குத் தெரியவில்லை.

பொத்தென குழிக்குள் விழுந்த
உடல்கள் எண்ணிக்கை குறைய..
எங்கள் மண் எம்மை
தின்னத் தொடங்கியது.

அம்மா எனக்கு மூச்சு முட்டுது.
கத்தினேன்
அம்மா..
வாயத் திறந்தபோது வாயில்
விழுந்த மண்..
முற்றிலுமாக...மூடியே மண் மேடானது..
மண் மேடாய்க் கிடக்கின்ற
வீடுகளைப் பாரும் அது..
முன்னாளில் தமிழர்களின்
குடியிருப்பு ஆகும்...உண்மையானது.

இன்று புதைகுழியை
தோண்டியவர்களே..
இப்போதாவது அம்மா
எலும்போடு.. இந்த பிள்ளை எலும்பை
அருகே வைத்து விடுங்கள்..
மீண்டும் இந்த மண்ணில்
என்னையும் என் அன்னையையும்
புதைப்பதாய்
இருந்தால் ...
என் தாய் அருகில் என்னையும்
புதைத்து விடுங்கள்
ஏனென்றால் இப்போதும் என்
காதுகளில் கேட்கிறது...
அம்மா பசிக்குதம்மா..
தண்ணி தாங்கம்மா..
அம்மா எங்கம்மா நீங்கள்.
அம்மா....அம்மா. அம்மா.

**மாணிக்கம் ஜெகன்**

## ரணில் நியமனம் தொடர்பில் மௌனம் கலைத்தது இந்தியா!

இந்தியாவின் அயல்நாடும் நட்பு நாடுமான இலங்கை அரசியலில் இடம்பெற்ற மாற்றங்களை வரவேற்பதாக இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சின் பேச்சாளர் ரவீஷ்குமார் தெரிவித்துள்ளார். நாட்டில் கடந்த 52 நாட்களாக இடம்பெற்று வந்த அரசியல் குழப்ப நிலைகளைத் தொடர்ந்து இலங்கையின் புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க நியமனம் பெற்றதன் பின்னர் இந்தியா வெளிவிவகார அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

1ம் பக்க தொடர்ச்சி...

போராடவேண்டும் அவருக்கு முழுமையனா ஆதரவினை வழங்குவதற்கு ஜனநாயக போராளிகள் கட்சி தயாராக உள்ளது. இவ்வாறு நடைபெறும் சம்பவங்களை சர்வதேச நாடுகளுக்கும் எடுத்து சொல்லியுள்ளோம் தொடர்சியாக எங்களை சந்திக்கின்ற சர்வதேச இராஜதந்திரிகள் முன்னாள் விடுதலைப்புலிகள் ஜனநாயகத்திற்கு திரும்பியுள்ளதை வரவேற்றுள்ளார்கள்.

உலகம் எங்களை ஏற்றுக்கொண்டுள்ளது மீண்டும் எங்களை பயங்கரவாதிகள் என்று சித்தரிப்பதற்கான நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. உலக நாடுகள் முழுதும் செயற்பாட்டுக்கொண்டிருக்கும் மனிதநேய அமைப்புக்களுக்கு நாங்கள் சொல்கின்றோம். தமிழர் தாயகத்தில் உள்ள மனிதாபிமான பிரச்சனைக்கு சரியான தீர்வினை முன்னெடுக்கவேண்டும் உலகத்திற்கு நாங்கள் சொல்லி நிக்கின்றோம் இங்கு ஒரு சரியான ஜனநாயகம் இல்லை. இதனை புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். நீங்கள் இருக்கின்ற ஒவ்வொரு நாடுகளிலும் அந்த நாட்டுபிரதிநிதிகளுக்கும் மனிதநேய அமைப்புக்களுக்கும் அழுத்தங்களை கொடுங்கள். தாயகத்தில் சரியான ஜனநாயகம் நிலைநிறுத்தப்படவில்லை தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான கதவுகள் திறக்கப்படவில்லை.

அதற்கான முனைப்புக்கள் எதுவும் இல்லை ஒட்டுமொத்தமாக சிங்கள தேசத்தில் ஆட்சி அதிகாரங்களை கைப்பற்று வதற்கான வேலைத்திட்டங்கள்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இதேவேளை இலங்கையின் அரச தலைவர் ஜனாதிபதி அவர்களுக்கும் நாங்கள் ஒரு கருத்தினை சொல்கின்றோம், போராளிகளின் ஜனநாயக செயற்பாடுகளுக்கு மதிப்பளிக்கவேண்டும் நாட்டில் சுதந்திரமான ஜனநாயகம் இருக்கவேண்டும் என்பதையே நாங்கள் விரும்புகின்றோம்" அவர் தெரிவித்தார்.

## தேசியத் தலைவர் காலத்தில் கல்வி சிறப்புற்றுக் காணப்பட்டது

### பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பெருமிதம்

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனுடைய காலத்தில் எம் இனத்தினுடைய கல்வியும் கலாச்சாரமும் சிறப்புற்றுக் காணப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி— உருத்திரபுரம் எள்ளுக்காடு முன்பள்ளியின் மாணவர்களை பாடசாலைக்கு வழியனுப்பும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தமிழீழத் தேசியத் தலைவர் காலத்தில் அமைக்கப்பட்ட இந்த முன்பள்ளிக் கட்டமைப்பானது அவரின் பெயர் சொல்லி எழுந்து நிற்கிறது. எமது இனத்தினுடைய கல்விக்காகவும் மேம்பாட்டிற்காகவும் அவர் ஆற்றிய பணி இந்தக் கட்டடத்தில் பறைசாற்றி நிற்கிறது. தங்கள் எதிர்கால வாழ்விற்காக வருகின்ற கல்வியாண்டில் பாடசாலை செல்ல உள்ள இந்த சிறார்களின் கல்வி சிறப்பாக இருக்க நாம் அனைவரும் பிரார்த்திக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார். இந்நிகழ்வில் கிராம மக்களும் மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## சிங்கள மக்களே நாங்கள் மோதியது புலனாய்வு அமைப்புகளுடன் மட்டுமே

கரு ஜயசூரிய மற்றும் ரணில் விக்ரமசிங்கவுடன் தாம் மோதவில்லை எனவும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ மற்றும் பிரித்தானியாவின் எம்16 போன்ற புலனாய்வு துறைகளுடன் மோதினோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு பெரும்பான்மை இல்லை என சபாநாயகர் அறிவித்தபோது கைகளைத் தட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்திய வெளிநாடுகளின் தூதுவர்கள் தற்போது சுகமான நித்திரையில் இருப்பார்கள் எனவும் அவர் கூறியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உதய கம்மன்பில இதனை குறிப்பிட்டுள்ளார். நல்லாட்சி அரசாங்கத்திடம் இருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் செய்தமை தாய் நாட்டுக்கு கிடைத்த மிகப்பெரிய வெள்ளி எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

3ம் பக்கத் தொடர்ச்சி

பிரேரணை என்பவற்றுடன் நீதிமன்றம் வழங்கிய இரண்டு தீர்ப்புக்களும் ஜனாதிபதிக்கு கடுமையான அழுத்தத்தைக் கொடுத்தன. இந்த நிலையிலும் ரணிலைப் பிரதமராக்க மறுத்தால் ஐ.தே.மு. இரண்டு நகர்வுகளை மேற்கொள்ளும் என்பது ஜனாதிபதிக்குத் தெரிந்திருந்தது. இந்த இரண்டு நகர்வுகளும் அவருக்கு அச்சத்தைக் கொடுத்தது.

ஒன்று — தனக்கு எதிராக குற்றப்பிரேரணை ஒன்றைக் கொண்டுவர ஐ.தே.மு. முற்படும் என ஜனாதிபதி அஞ்சினார். சம்பந்தனுடனான சந்திப்பின்போது அவ்வாறு குற்றப்பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டால் அதனை நீங்கள் ஆதரிப்பீர்களா என அவர் கேட்டிருந்தமை இவ்விடயத்தில் அவர் எந்தளவுக்கு அச்சமடைந்திருந்தார் என்பதைக் காட்டியது. அப்போது சம்பந்தன் மைத்திரிக்குச் சாதகமாகவே பதிலளித்தார். அவாவது அவ்வாறான பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டால் அதனை தான் ஆதரிக்கப்போவதில்லை என சம்பந்தன் அப்போது உறுதியளித்தார். இவ்வாறான குற்றப்பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து நிறைவேற்ற முடியாமல் போனாலும் கூட அவ்வாறான பிரேரணை ஒன்று வருவதே தன்னுடைய நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்திவிடும் என மைத்திரி அஞ்சினார். அது குறித்த பதிவு தன்னுடைய அரசியலுக்கு களங்கத்தை ஏற்படுத்திவிடும் என அவர் கருதினார். அதனைவிட, அரசியலமைப்பை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டுக்கள் கூட தன்னைக் கடுமையாகப் பாதிக்கலாம் என்ற அச்சமும் இவருக்கு இருந்தது.

ரணிலை பிரதமராக்காவிட்டால், கொழும்பில் பாரிய மக்கள் பேரணிகளை ஏற்பாடு செய்து தன்னுடைய செயலகத்தையும், வாஸஸ்தலத்தையும் சுற்றிவளைப்பதற்கு ஐ.தே.மு. ஏற்பாடு செய்திருந்தது. இதுவும் பெருமெடுப்பில் இடம்பெற்றால் தன்னைக் கடுமையாகப் பாதிக்கும் என அவர் கருதினார். தனது பிடியை அவர் தளர்த்திக்கொள்ள இந்த இரண்டும்தான் பிரதான காரணம். ரணிலைவிட தம்மிடம் வேறு தெரிவுகள் இல்லை என்பதில் ஐ.தே.க. தலைமை உறுதியாக நின்றதும் மைத்திரிக்கு நெருக்கடியைக் கொடுத்தது. இவற்றைவிட சிறீலங்கா சுதந்திரக் கட்சி தன்னுடன் முழுமையாக நிற்குமா என்ற கேள்வியும் மைத்திரிக்கு இருந்தது. மகிந்த ராஜபக்ஷ அமைத்த பொதுஜன பெரமுனவுடன் அவருக்கு ஏற்கனவே சில முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இந்தப் பின்னணியில் மகிந்த ராஜபக்ஷவும் பதவியை ராஜினாமா செய்யப்போவதாக அறிவித்தார். இதற்கு மேலும் பிடிவாதமாக ரணிலை நியமிக்கமாட்டேன் என நிற்பது தனக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மைத்திரி உணர்ந்தார்.

மைத்திரி இறங்கி வந்தமைக்கு இவைதான் காரணம். ஆனால், இப்போது ஏற்பட்டிருப்பது ஒரு தற்காலிக இணக்கம்தான். இந்த இணக்கம் தொடருமா என்பதும் கேள்விக்குறிதான்.

## மகிந்த பதவி விலகல் குறித்து ஐ.நா.வின் முன்னாள் தூதுவர் மகிழ்ச்சி



நாட்டு மக்கள், சிவில் சமூகம், சுதந்திர ஊடகங்கள் நீதிமன்றம் ஆகிவற்றால்தான் பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ஷே பதவி விலகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐ.நாவுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்தாபவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவியில் இருந்து தான் விலகிக்கொள்வதாக முடிவு செய்திருப்பதாக நேற்று மாலை தகவல் வெளியானதை அடுத்து, தனது டுவிட்டர் பதிவுகளில் சமந்தா பவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்றத்தை கலைத்து ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன வெளியிட்ட வர்த்தமனி அறிவிப்பு சட்டவிரோதமானது என்று உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பைக் குறித்து கருத்து தெரிவித்துள்ள சமந்தா பவர் , இத்தீர்ப்பு இந்நாட்டின் ஜனநாயகத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றும் இதிலிருந்து ஜனாதிபதி சிறிசேனா செய்தியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் , பிளவுகள் ஆழமாகும் முன்னர் இந்த பிரச்சனையைத் தீர்ப்பதை நோக்கி நகரவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



## ஆஸ்திரேலியாவில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவர்கள்

ஆஸ்திரேலியாவின், நியூ சவுத்வேல்ஸ் மாநிலத்தில் உயர்தர தேர்விற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாக எடுத்து மாநிலத்தில் முதல் மாணவனாக 95 மதிப்பெண்களை பெற்ற ஹரிஷ்ணா செல்வவிநாயகனும், இரண்டாம் இடத்தை 94 மதிப்பெண்கள் பெற்று ப்ரீத்தி சக்தி சிவபாலனும் அசத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்வவிநாயகன், பத்மினி தம்பதிகளின் மகனான ஹரிஷ்ணா, ஆஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. வென்ற்வேர்த்வில் தமிழ் பாடசாலையில் தமிழ் மொழியை கற்ற இவர் கலைகளிலும் மிகுந்த ஆர்வமுள்ள மாணவன். தேர்வை திணைக்களம் (NESA) தொலைபேசியூடாக பெறுபேறை வெள்ளிக்கிழமை 7ம் தேதி அறிவித்த பொழுது உங்கள் மகிழ்ச்சியை யாருடன் பகிர்ந்து கொண்டீர்கள் என்று கேட்டபொழுது நான் முதன் முதலாக மனதார பகிர்ந்து கொண்டவர்கள் எனது அன்பு பெற்றோரும், தந்தை ஸ்தானத்தில் இருக்கும் எனது குரு நவரட்ணம் ரகுராம் ஆசிரியரும் என்கிறார் ஹரிஷ்ணா பெருமையோடு.




உயர்தர தேர்வில் ஒவ்வொரு பாடங்களிலும் அதிக மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்கள் நியூ சவுத் வேல்ஸ் மாநில பிரதமரினால் கௌரவிக்கப்படுவது மரபு. அதற்கமைய இவர்களிற்கான பாராட்டு விழா புதன்கிழமை (12/12/18) அன்று UNSW பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. சான்றிதழ்களை பிரதமரின் சார்பில் கல்வியமைச்சர் வழங்கி கௌரவித்திருந்தார். வீட்டிலும், வெளியிலும் தமிழ் நண்பர்களுடன் இயன்றளவு தமிழில் பேசுங்கள் என இளையோர்களிற்கு அறிவுரை கூறும் இவர், தமிழில் ஆர்வத்தை ஏற்படுத்திய பெற்றோர்களிற்கும் நன்றிகளை கூறத் தவறவில்லை.

தனது நண்பர்களும், ரகுராம் ஆசிரியரும் ஒரு தனிப்பட்ட குடும்பத்தை உருவாக்கியுள்ளதாகவும் இந்த குடும்பம் தந்த உதவியினாலும், உந்துதலினாலும் தான் இந்த நிலையில் நிற்பதாக பெருந்தன்மையோடு கூறுகின்றார். மாநிலத்தில் தேர்வு எழுதிய 32மாணவர்களில் 20பேர் அதியுயர் சித்தி பெற்றது பெருமையான விஷயம். பாடசாலைக்கு அப்பால் பிரத்தியேகமாக இலவச தமிழ் வகுப்புக்களை உயர்தர மாணவர்களிற்கு நடாத்திய ஆசிரியர் நவரட்ணம் ரகுராமான், ஒன்பது மாணவர்களில் இருவர் முதலாம், இரண்டாம் இடங்களில் வந்திருப்பதுடன் மேலும் ஐந்து மாணவர்கள் அதியுயர் சித்தி பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழ்மக்களை படுகொலை செய்தவர்கள்மீது கனடாவின் சட்டத்தைப் பிரயோகிக்க வேண்டும்

சிறிலங்காவின் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக கனடாவின் Magnitsky Sanction சட்டத்தை உடனடியாகப் பிரயோகிக்குமாறு கனடாவின் எதிர்க்கட்சி வெளிவிவகார அமைச்சின் நிழல் உதவி அமைச்சர் எம்பி Garnett Genuis விடுத்திருக்கும் வேண்டுகோள் இலங்கையிலும், கனடாவிலும் உள்ள பல்வேறு அரசியல் தலைவர்களிடமும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. Garnett Genuis அவர்களின் இந்த நேர்காணலில் தெரிவிக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட சில விடயங்கள் இலங்கையின் அரசியல் நெருக்கடிகளில் சிக்கியிருக்கும் பல்வேறு தரப்பினருக்கும் கனடாவிலிருந்து வெளியிடப்பட்ட எச்சரிக்கையாகக் கருதப்படுகிறது.



Magnitsky Sanction என்றழைக்கப்படும் தடைச் சட்டம், கனடாவின் எதிர்க் கட்சியான கொன்சவேடிவ் கட்சியினரால் முன்மொழியப்பட்டு, இன்றைய கனடா அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டமாகும். உலகின் எப்பாகத்திலும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை இனம் கண்டு, அவர்கள் மீது தனிப்பட்ட வகையில் குறிவைத்து கடுமையான நடவடிக்கைகளை எடுக்க இச் சட்டம் வழி செய்கிறது. மனித உரிமை மீறல்கள், ஊழல் குற்றங்கள் என்பவற்றில் சம்பந்தப்பட்ட எவராயினும் இச்சட்டத்தின்கீழ் கனடாவில் கடும் நடவடிக்கைக்கு உள்ளாவர். அவர்களது சொத்துக்கள் கனடாவில் இருக்குமாயின் அவை பறிமுதல் செய்யப்படும். அவர்களுக்கு கனடாவிற்கு பயணம் செய்யும் உரிமை மறுக்கப்படும். அதன் மூலம் அவர்கள் தம் சொந்த நாட்டில் முடங்க நிர்ப்பந்திக்கப்படுவர்.


இந்த சட்டம் முதலில் கனடாவின் செனட் சபையில் கொன்ஸவேடிவ் செனட்டர்களால் முன்மொழியப்பட்டு செனட் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்பின் கனடாப் பாராளுமன்றத்தில் Bill S-226 - Magnitsky Sanction என்ற பெயரில் கனடாவின் தற்போதைய லிபரல் அரசாங்கத்தினால் சற்றுத் தயக்கத்தின் பின்னர் சட்டமாக்கப்பட்டது. உண்மையில் இதற்கான முன்மாதிரிச் சட்டம் 2012ம் ஆண்டு அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்டிருந்தது. ரஷ்யாவில் சிறையில் அடைக்கப்பட்டு 2009ம் ஆண்டு இறந்த Sergei Magnitsky என்ற சட்டத்தரணியின் மரணத்தில் சம்பந்தப்பட்டிருந்தவர்களது சொத்துக்களை அமெரிக்காவில் பறிமுதல் செய்வதற்காக இச்சட்டம் அங்கு கொண்டுவரப்பட்டது. "இந்தச் சட்டம் ஒரு கருவியாகும். மனித உரிமைகளை கொடூரமாக மீறியவர்களுக்கு எதிராக இந்தக் கருவியை கனடாவின் தற்போதைய அரசாங்கம் பிரயோகிக்க வேண்டும். யுத்தம் முடிந்து கொண்டிருந்த காலத்தில் செய்யப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறும் வகையில் அது அமைய வேண்டும். கனடா மட்டுமல்ல, கனடாவின் நட்பு நாடுகளையும் இந்த நடவடிக்கையில் இணைக்க முடியும்." என்று உறுதியாகக் கூறியிருக்கிறார் Garnett Genuis. "ஸ்ரீலங்காவில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் உட்பட பல விடயங்களை தற்போதைய கனடா அரசாங்கம் அதிகமாகக் கவனத்தில் கொள்வதில்லையே.." என Garnett Genuis அவர்களிடம் நேர்காணலை செய்த ராகவன் பரஞ்சோதி வினவியபோது அதை Garnett Genuis ஏற்றுக் கொண்டார். "கடந்த தேர்தலில் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு எதிரான பல நடவடிக்கைகளை எடுப்போம் என சொல்லியிருந்தாலும் தற்போதைய அரசாங்கம் அதில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை... இது மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட பொது விடயம்" என்றார் Garnett Genuis.

கனடாவின் எதிர்க்கட்சியினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், கனடா ஆளும் கட்சியால் நிறைவேற்றப்பட்டதுமான Magnitsky Sanction சட்டம் குறிப்பிட்ட சில நாடுகளிற்கு எதிராக ஏற்கனவே பாய்ந்திருக்கிறது. சவூதி அரேபியாவுக்கு எதிராக அண்மையில் கனடிய அரசால் பிரயோக்கிக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல இச்சட்டம் தமிழினத்திற்கு எதிராக இனப்படுகொலையை செய்தவர்கள்மீது பாயும் நிலைமை ஏற்பட வேண்டும் என்ற Garnett Genuis அவர்களின் வேண்டுகோள் தற்போது மற்றவர்களாலும் பரவலாக எழுப்பப்பட்டு வருகின்றது. இதற்கு தமிழ்க் கனடியர்களும், தமிழ் கனடிய அமைப்புக்களும் ஆதரவு தந்து இன்றைய கனடிய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். ஈழத்தமிழர்கள் அதிகமாக வதியும் ரொரன்டோ பெரும்பாகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் லிபரல் அரச பாராளுமன்ற உறுப்பினர்களை தங்கள் நிகழ்வுகளுக்கு அழைத்து மாலை அணிவித்து அழகு பார்ப்பதற்கு முன்னர் அவர்களின் நிலைப்பாட்டை அறிவது முக்கியம். கனடாவிலும் அமெரிக்காவிலும் இந்தச் சட்டம் அமுலில் இருப்பதால் இலங்கையில் மனித உரிமை மீறல்களைச் செய்தவர்கள் இதன் மூலம் வட அமெரிக்காவில் கடும் சிக்கல்களை எதிர் நோக்குவர்.



## கனடாவில் தமிழ் கலாச்சார மாத நிகழ்வுகள் துவக்கம்

கனடாவின் ஸ்கார்போரா நகரில் கிளென் ரவின் ஜூனியர் பப்ளிக் பள்ளியில் (Glen Ravine Junior Public School) தமிழ் கலாச்சார மாத நிகழ்வுகள் துவங்கியுள்ளன. பாடசாலை வளாகமானது தமிழர் கலாச்சார அடையாளங்களாலும் மலர் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தமிழ் மாணவர்களின் கலை கலாச்சார நிகழ்ச்சிகளும் சிறப்பாக அரங்கேற்றப்பட்டது. மாணவர்கள் ஆடிய நடனங்கள் போரின் வலியைப் பிரதிபலிப்பதோடு மாணவன் ஒருவன் உரையாற்றும்போது கனடா ஒரு இரக்கமுள்ள மனிதநேயமிக்க நாடு என்றும் கனடாவில் வாழ்வதற்கு தமிழர்கள் ஆகிய நாங்கள் நன்றியுடையவர்களாக இருப்போம் என்று தெரிவித்தது தமிழர்களின் நன்றி மறவாத பண்பை பறைசாற்றி நின்றது. 2016ஆம் ஆண்டு தமிழ் கலாச்சார மாதம் தொடர்பாக கனடா நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு கட்சிப் பாகுபாடு இன்றி அனைத்து உறுப்பினர்களும் (283) அமோக ஆதரவு அளித்ததும், அதையடுத்து அனைவரது கை தட்டல்களுக்கு நடுவே அந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியதும் குறிப்பிடத்தக்கது.



# மனித உரிமை அமைப்புக்கள் மௌனம் காப்பது ஏன்?.....

2ம் பக்க தொடர்ச்சி...

பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

### பின்னணி என்ன?

மன்னார் நகரம் நீண்டகாலமாகவே இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது என்று நகரவாசிகள் கூறுகின்றனர். விடுதலைப்புலிகள் மன்னார் மாவட்டத்தின் பெருநிலப் பகுதியிலேயே தமது தளங் களையும் முகாம்களையும் அமைத்து நிலை கொண்டிருந்தனர். சமாதான காலத்தில் நகரப் பகுதியில் அரசியல் நடவடிக்கைக்கான அலுவலகத்தை மட்டுமே அவர்கள் கொண்டிருந்தனர் என்றும் நகரவாசிகள் தெரிவிக்கின்றனர். மன்னார் சதொச கட்டிடத்திற்கு எதிர்ப்புறத்தில் அமைந்துள்ள கட்டிடத்திலும், சதொச கட்டிடம் அமைந்திருந்த அதே பகுதியில் சில மீற்றர் தொலைவில் மன்னார் நகர பாலத்திற்கருகில் கடற்படையினரும், இராணுவத்தினரும் பெருமளவில் நீண்டகாலமாக நிலைகொண்டிருந்தனர் என்று மன்னார் மாவட்ட மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

மன்னார் பாலத்துக்கும் சதொச கட்டிடத் திற்கும் இடைப்பட்ட பகுதியில் வீதியின் இரு மருங்கிலும் நிலைகொண்டிருந்த படையினர், பிரதான நிலப்பகுதியில் இருந்து நகரின் உள்ளே பிரவேசிப்பவர்களையும், நகரில் இருந்து பிரதான நிலப்பகுதிக்கு வெளியேறிச் செல்பவர்களையும் தொடர்ச்சியாக அக்காலப்பகுதியில் சோதனை செய்வதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். ஆட்கள் மட்டுமல்லாமல் வாகனங்களும் படையினருடைய தீவிர சோதனையின் பின்னரேசொல்வதற்கு அனுமதிக்கப்பட்ட நடைமுறை கைக்கொள்ளப்பட்டிருந்தது. பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ஓரிடத்தில் பெரும் எண்ணிக்கையிலான மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

மன்னார் நுழைவாயில் சோதனைச் சாவடியைக் கடந்தபோது ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றிருந்ததாக காணாமல் போனோரைத் தேடும் உறவினர்கள் கூறுகின்றார்கள். இது குறித்து காணாமல் போனவர்களைக் கண்டு பிடிப்பதற்கான விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணைகளின் போது உறவினர்கள் சாட்சியமளித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. ஆனால், 276 மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்ற போதிலும்,எவரும்யார்மீதும்வெளிப்படையாக இது வரையில் குற்றம் சுமத்தவில்லை. இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூடுகளின் உரிமையாளர்களான ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் வானத்தில் இருந்து குதித்து புதைந்து போனார்களோ என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள். மன்னார் மனிதப் புதைகுழிக்கும் படையினருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அதுபற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது என்று இராணுவ பேச்சாளர் சுமித் அத்தபத்து தெரிவித்திருக்கின்றார்.

### ஆடைகள் எதுவுமே இல்லை

மன்னார் மனிதப் புதைகுழி பல்வேறு தரப்பினரையும் அதிர்ச்சியடையச் செய்துள்ள போதிலும், அது குறித்து, தமிழ் தலைமைகள் மட்டத்தில் உணர்வுபூர்வமான நிலைப் பாட்டைக்காண முடியவில்லை.அதேபோன்று மனித உரிமை ஆர்வலர்கள், மனித உரிமை அமைப்புக்களும்கூட, இதுவிடயத்தில் மௌனம் காப்பது வேதனையளிக்கிறது. இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட ஆட்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள ஒரு பின்னணியில் ஒரே இடத்தில் மிகப் பெரிய எண்ணிக்கையிலான மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்படுவதும், முடிவின்றி மனித எலும்புக்கூடுகள் வந்து கொண்டிருப்பதுவும், கவனிப்பாரற்ற ஒரு வகையில் ஒரு மௌனமான நிலைமை நிலவுவது ஏன், என்பது தெரியவில்லை.

மன்னார் மாவட்டத்தின் பிரதான நிலப் பகுதியில் மன்னார் மதவாச்சி வீதியின் வடக்குப் புறத்தில் உயிலங்குளம் பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும், விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்கும் இடையிலான போக்குவரத்துக்குரிய பாதை அமைந்திருந்தது. இங்கு ஒரு சோதனைச் சாவடியும் அமைந்திருந்தது. இந்த எல்லைப்புறத்தின் இரு பக்கங்களிலும் இராணுவத்தினர் ஒருபக்கத்திலும், விடுதலைப் புலிகள் மறுபக்கத்திலுமாக சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த சோதனைச்சாவடியின் ஊடாகவே உயிலங்குளத்திற்கு வடக்கே உள்ள மன்னார் மாவட்டத்தின் பிரதான நிலப்பகுதியில் இருந்த மக்கள் தமக்குத் தேவையான அத்தியாவசிய உணவு மற்றும் பாவனைப் பொருட்களைப் பெற்றுச் செல்வதற்காக இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்து சென்றனர். அந்த அந்த இராணுவ சோதனைச்சாவடியைக் கடந்து சென்றவர்கள் பலர் காணாமல் போன சம்பவங்கள் இடம்பெற்றிருந்ததாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்புக்கள் தெரிவித்திருக்கின்றன. இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள 276 மனித எலும்புக்கூடுகளில் 269 எலும்புக்கூடுகள் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஏனையவை அகழ்விடத்தின் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. இதுவரையில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள மனித எலும்புக் கூடுகளுடன் மண்பாண்டங்கள், பீங்கான் துண்டுகள், இங்கு பாதிக்கப் பட்டவர்கள் அணிந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்ற ஆபரணம் உட்பட உலோகங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இந்த மனித எலும்புக்கூடுகளில் ஆடைகள்எதுவுமேகாணப்படவில்லைஎன்பது அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்களின் புருவங்களை உயர்த்தச் செய்திருக்கின்றது. இருபதினாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ள நிலையில், அவர்களுக்கு என்ன நடந்தது, அவர்கள் எவ்வாறு காணாமல் போனவர்கள் என்பதைக் கண்டறிவதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தியிருக்கின்றது. இந்த நிலையில் மன்னார் சதொச மனிதப் புதைகுழியில் இனந்தெரியாத வகையில் மனித எலும்புக்கூடுகள் தொடர்ச்சியாக வெளிக்கிளம்பிக் கொண்டிருப்பது, இலங்கை மனித உரிமை நிலைமையின் தன்மை எத்தகையது என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

இறுதி யுத்த மோதல்களின்போது மனித உரிமைகள் மீறப்பட்டன. சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டிருக்கின்றன. போர்க்குற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. யுத்த மோதல்களில் ஈடுபட்டிருந்த இராணுவம் மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய இருதரப்பினருமே இதற்கு பொறுப் பானவர்கள் என்று சர்வதேச அமைப்புக்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

இருப்பினும் இறுதி யுத்தத்தின் போது படையினர் அளவுக்கு மிஞ்சிய அளவில் இராணுவ பலப்பிரயோகத்தைப் பயன்படுத்திய தாகவும், இதனால் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐநா கூறியிருக்கின்றது. அதேவேளை, உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்பு கூறுகின்ற கடப்பாட்டைநிறைவேற்றுவதற்கு ஐநா மனித உரிமைப் பேரவையின் 30—1 தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கின்றது. இந்தப் பின்னணியில் மன்னார் மனிதப் புதைகுழியானது, இங்கு மிக மோசமான போர்க்குற்றம் ஒன்று இழைக்கப்பட்டிருக்கின்றது என்பதையே அடையாளப்படுத்தியிருக்கின்றது. இதுவிடயத்தில் மனிதஉரிமைஅமைப்புக்களும், பொது அமைப்புக்களும் உண்மையைக் கண்டறிவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கான அழுத்தத்தைக் கொடுக்க முன்வர வேண்டும்.இது அவர்களின், தட்டிக்கழிக்கப்பட முடியாத, தலையாய மனிதாபிமான கடமை ஆகும்.

முதற் பக்கத் தொடர்ச்சி

யார் கொலை செய்தார்கள் யாரை கொலை செய்தார்கள் என்பது நிச்சயமற்றதாக காணப்படுகின்றது என தெரிவித்துள்ள இன்டிபென்டன்ட், சிறுவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளமை நிச்சயமாக இது ஒரு சமூகம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது. கடந்த மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட மனிதபுதைகுழிகளை அகழும் பணிகள் இன்னமும் ஆரம்பகட்டத்திலேயே உள்ளன என மன்னார் மனித புதைகுழியின் பிரதான விசாரணை அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். எங்களிற்கு இன்னமும் இந்த மரணங்கள் எப்போது இடம்பெற்றன என்பது தெரியவில்லை என குறிப்பிட்டுள்ள அவர் கொல்லப்பட்டவர்கள் யார் அவர்களின் பெயர் விபரங்கள் என்ன அவர்கள் தமிழர்களா போராட்டக்காரர்களாக என்பது தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.




மனித உரிமை பணியாளர்களும் காணாமல் போனவர்களின் உறவினர்களின் மனித புதைகுழி விவகாரத்தில் நீதி வழங்கப்படவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் இன்டிபென்டன்ட் தெரிவித்துள்ளது. காணாமல்போனவர்களின் உறவினர்களின் சார்பில் குரல்கொடுக்கும் சட்டத்தரணி சந்திரபிரதாசம் நிரஞ்சன் ஒன்பது குடும்பங்களின் சார்பில் சத்தியக் கடதாசியை சமர்ப்பித்துள்ளார். அந்த ஒன்பது குடும்பத்தவர்களும் படையினர் மற்றும் இனந்தெரியாத குழுக்களால் மன்னாரில் கடத்தப்பட்டவர்களே மனித புதைகுழிக்குள் காணப்படுகின்றனர் என தெரிவித்துள்ளனர்.

சித்திரவதைகளும் கொலைகளும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் குற்றங்கள் என தெரிவித்துள்ள சட்டத்தரணி இந்த மனித புதைகுழிக்குள் குழந்தைகள் காணப்படுவதையும் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் பல பாகங்களிலும் தமிழர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார்கள் என நாங்கள் நிச்சயமாக கருதுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வளைகுடா நாடுகளில் செத்துப் பிழைக்கும் தமிழர்கள்

கடந்த நான்காண்டுகளில் மட்டும் சௌதி அரேபியா உள்ளிட்ட ஆறு வளைகுடா நாடுகளில் 28,523 இந்தியர்கள் உயிரிழந் திருப்பதாக இந்திய அரசு தெரிவித்திருப்பது உலகத் தமிழர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

தற்போது இந்தியா நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் வளைகுடா நாடுகளில் அதிகளவில் உயிரிழந்து வரும் இந்தியர்கள் குறித்த கேள்விக்கு பதிலளித்து பேசிய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் வி.கே. சிங், "2014 முதல் 2018ஆம் ஆண்டுவரை ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், குவைத், ஓமன், கத்தார், சௌதி அரேபியா உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் 28,523 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளார். கடந்த நான்காண்டுகளில் மிக அதிகபட்சமாக சௌதி அரேபியாவில் மட்டும் 12,828 இந்தியர்கள் உயிரிழந்துள்ளதாக அமைச்சர் வெளியிட்ட தகவல் பல்வேறு தரப்பினரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

**உயிரிழப்பிற்கான முக்கிய காரணம் என்ன?**

"பெரியளவில் படிப்பறிவு தேவையில்லை, ஆங்கில அறிவு அவசியமில்லை, கை நிறைய சம்பளம், வருடத்திற்கு ஒரு மாதம் விடுமுறை, தங்குமிடம்—உணவு இலவசம்" போன்ற கவர்ச்சிகரமான வார்த்தைகளை நம்பி தங்களது சொந்த ஊரில் வேலையில்லாதவர்கள் வளைகுடா நாடுகளுக்கு செல்லும் போக்கு தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது. பெரியளவில் படிப்பறிவு தேவையில்லை, ஆங்கில அறிவு அவசியமில்லை, கை நிறைய சம்பளம், வருடத்திற்கு ஒரு மாதம் விடுமுறை, தங்குமிடம்—உணவு இலவசம்

**உண்மையிலேயே வளைகுடா நாடுகளில் என்ன நடக்கிறது?**

கிட்டத்தட்ட 30,000 இந்தியர்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் உயிரிழப்பதற்கு என்ன காரணம்? வேலைத் தேடி செல்பவர்கள் சம்பாதிக்கிறார்களா அல்லது முதலீடு செய்த பணத்தையும், வாழ்வாதாரத்தையும் இழக்கிறார்களா?

மேற்குத் தமிழகத்தில் தாராபுரத்திலுள்ள ஒரு நடுத்தர குடும்பத்தை சேர்ந்த கார்த்தி கேயன் என்பவர் உயிர் பிழைத்தால் போதும் என்று இரண்டே மாதத்தில் சௌதி அரேபி யாவிலிருந்து திரும்பிவிட்டதாக கூறுகிறார்.

மாதத்திற்கு 70 ஆயிரம் ரூபாய் சம்பளம் கிடைக்கும் என்று பிரயாண முகவர்கள் கூறிய ஆசை வார்த்தையில் கையில் இருந்த பணத்தையெல்லாம் செலவு செய்து பெருங்கனவுடன் சௌதி அரேபியா சென்றேன். ஆனால், அந்த நிமிடமே பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. விமான நிலையத்திலிருந்து என்னை அழைத்துச் செல்வதற்கு வந்திருந்த ஒருவர் எனது கடவுச்சீட்டை உடனே வாங்கிக் கொண்டார். விமான நிலையத்திலிருந்து சுமார் ஐந்து மணிநேரம் காரில் பாலைவனத்தை ஒட்டிய பகுதிக்கு அழைத்து சென்று அங்குள்ள ஒரு மிகப் பெரிய மனித நடமாட்டமற்ற பங்களாவை காட்டி, இதை நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டனர்" என்று தழுதழுத்த குரலில் தனது வேதனையான அனுபவத்தை விளக்குகிறார் கார்த்திகேயன்.

இதுபற்றி இந்திய தூதரகத்தில் புகார் அளித்தீர்களா என்று அவரிடம் கேட்டபோது, "நான் வலுக்கட்டாயமாக அடைக்கப்பட்ட இடத்திலிருந்து ஒரு சாலையை அடைவதற்கே ஐந்து கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டும். எந்த வசதியுமற்ற அந்த பகுதியிலிருந்து வெளியே வர முடியாத காரணத்தால் அங்கேயே முடங்கிவிட்டேன். அந்த சூழ்நிலையில், இந்திய தூதரகம் உள்ளிட்ட யாரையும் தொடர்புகொள்ளவும் முடியவில்லை, அப்படி முயற்சி செய்தாலும் பயனில்லை என்பதால் வீட்டிற்கு போன் செய்து நான் உடனடியாக திரும்ப உள்ளதாக கூறினேன்" என்று அவர் மேலும் கூறுகிறார்.

**ஆடு, மாடு மேய்த்த பொறியியல் பட்டதாரிகள்**

ஏன் தமிழகம் வருவதற்கு இரண்டு மாதங்களானது என்று அவரிடம் கேட்டபோது, "முதல் மாதம் சம்பளம் தந்தவுடன் அங்கிருந்து

**பொறியியல் பட்டதாரிகள் கூட ஆடு மாடு மேய்ப்பவர்களாக இருக்கிறார்கள்**

வீட்டிற்குத் திரும்பிவிடலாம் என்று காத்திருந்தேன். மாதம் 75 ஆயிரம் சம்பளம் என்று முகவர் கூறிய நிலையில், உணவு உள்ளிட்ட செலவுகளை கழித்துக்கொண்டு எனக்கு கையில் மிஞ்சியது வெறும் 15 ஆயிரம் ரூபாய்தான். மேலும், அங்கிருந்து தமிழகம் திரும்புவதற்கு விசா, விமான பயணச்சீட்டு ஆகியவற்றை பெறுவதற்கு ஒன்றரை லட்சம் செலவழித்து அங்கிருந்து செல்வதற்கு இரண்டு மாதமாகி விட்டது" என்று கார்த்திகேயன் கண்ணீர்மல்க கூறினார்.



"ஒருநாள் நான் வேலை பார்த்த இடத்திலிருந்து சுமார் இரண்டு கிலோ மீட்டர் நடந்து சென்றபோது, ஆச்சர்யமளிக்கும் வகையில் தமிழில் பேசும் இளைஞர்களை சந்திக்க நேர்ந்தது. தமிழகத்தில் பெரிய கல்லூரிகளில் பொறியியல் படித்த அந்த இளைஞர்கள் அங்கு வாழ்க்கையே நொந்துபோய் மாடு மேய்த்துக்கொண்டிருந்தார்கள்.

**அதிகரித்த வேலைப்பளு மன அழுத்தம் காரணமாக இளைஞர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். அவரை தமது நாட்டிற்கு கொண்டுசெல்ல முடியாது என்பதால் அங்கேயே அடக்கம் செய்துள்ளார்கள்.**

தங்களுக்கு சொந்த ஊருக்கே சென்று அங்கேயே நிரந்தரமாக தங்க விரும்புவ தாகவும், ஆனால் இங்கிருந்து தப்ப முடியவில்லை என்றும் அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்" என்று வேதனையுடன் கூறிய கார்த்திகேயன் இதுபோன்று மிகுந்த வேலைப்பளு, மன அழுத்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகவும், அவரை சொந்த ஊருக்கு எடுத்துச்செல்ல இயலவில்லை என்பதால் குடும்பத்தினரின் ஒப்புதலுடன் அங்கேயே புதைக்கப்பட்டதாகவும் அதிர்ச்சியளிக்கிறார்.

"அரேபியர்களின் வீடுகளில் பணி புரிபவர்களின் நிலையை விவரிக்க முடியாது"

"துபாயில் எனக்கு வேலை கிடைத்த வுடனேயே அதற்கு காரணமாக இருந்த நண்பருக்கு வேலை பறிபோனதுடன் அவர் ஒரே மாதத்தில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால், அந்நாட்டின் பணிப்பாதுகாப்பு குறித்த அச்சத்தையும், மன அழுத்தத்தையும் எனக்கு உண்டாக்கியது. அதுமட்டுமின்றி, நமது சிறிய வயதிலிருந்து எதிரிகளாக சொல்லி வளர்க்கப்பட்ட பாகிஸ்தானை சேர்ந்த 12 பேருடன் 13வதாக என்னையும் ஒரே வீட்டில் தங்க வைத்தபோது எனக்கு பயமும், பதற்றமும் ஏற்பட்டது. ஆனால், அவர்கள் உடனடியாக காட்ட தொடங்கிய அன்பு, அவர்களை பற்றிய மனநிலையை மாற்றியதுடன், நான் துபாயில் தொடர்ந்து இருப்பதற்கும் உதவியது" என்று கூறுகிறார் தற்போது துபாயில் வசிக்கும் திருச்சியை சேர்ந்த மது ரஞ்சனி. தற்போது துபாய் அரசின் உதவிபெறும் நிறுவனமொன்றில் நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வரும் இவர், அந்நாட்டில் அரேபியர்களின் வீடுகளில் ஓட்டுநர்களாக, சமையல் செய்பவர்களாக, உதவியாட்களாக வேலை செய்பவர்கள் மிகவும் மோசமாக, தரக்குறைவாக நடத்தப்படுவது வாடிக்கையான ஒன்று என்றும் தாங்கள் இங்கு வருவதற்கு முதலீடு செய்த பணத்தையாவது சம்பாதித்துக்கொண்டு ஊருக்கு செல்ல வேண்டும் என்ற கட்டாயத்தின் பேரில் பலர் பணிபுரிந்து வருவதாகவும் கூறுகிறார்.

"துபாயை பொறுத்தவரை அரசாங்க நிறுவனத்திலோ அல்லது அரசு உதவிபெறும் நிறுவனத்திலோ அலுவலக வேலை செய்பவர்களுக்கு நல்ல ஊதியமும், விடுமுறையும், பணிப்பாதுகாப்பும் கிடைக்கிறது. ஆனால், வளைகுடா நாடுகளுக்கு போதிய படிப்பறிவு இல்லாதவர்கள் அதிகளவில் வருவதால், அவர்கள் மேற்கண்ட எதையும் எதிர்பார்க்க முடியாது.

நிறுவனங்களில் கடைநிலை ஊழியர்களாக பணிபுரிபவர்களுக்கு அதிக பணிநேரம், மன அழுத்தம், பணிப்பாதுகாப்பின்மை போன்றவை பிரச்சனைக்குரியவைகளாக இருந்தால், அரேபியர்களின் வீடுகளில் பணியாற்றுபவர்கள் கார் ஓட்டுவது முதல் உரிமையாளர்களின் வீட்டு கழிவறையை சுத்தம் செய்வது வரை அனைத்து வேலை களையும் வலுக்கட்டாயத்தின் பேரில் செய்யும் நிலை உள்ளது" என்று அவர் விவரிக்கிறார்.

இந்தியர்கள் போன்ற வெளிநாடுகளை சேர்ந்த பணியாளர்களுக்கு இருக்கும் சட்டரீதியான பாதுகாப்பு குறித்து அவரிடம்

தொடர்ச்சி 10ம் பக்கம்

# முட்டாள் என்று கூகுளில் தேடினால் ட்ரம்ப் பெயர் ஏன் வருகிறது? - சுந்தர் பிச்சை விளக்கம்



கூகுளில் முட்டாள் என்று தேடினால் அமெரிக்காவின் ஜனாதிபதி ட்ரம்ப்பின் புகைப் படம் ஏன் வருகிறது என்று எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு கூகுள் நிறுவனத்தின் தலைமை அதிகாரி சுந்தர் பிச்சை பதில் அளித் திருக்கிறார்.

சீனாவின் தணிக்கை முறைகளுக்கு ஏற்ப சேவைகளை அளிப்பதில் கூகுள் நிறுவனம் சமரசம் செய்து கொள்கிறது என அமெரிக்க நாடாளுமன்ற விசாரணைக் குழுவில் புகார் அளிக்கப்பட்டது. இந்தப் புகார் குறித்த விசாரணைக்கு நேரில் ஆஜரான சுந்தர் பிச்சை, சீனாவுக்கான சேவைகளை அளிப்பதில் வெளிப்படையாக இருப்போம் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்விக்கு விடை அளித்தார். மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய காத்திரமான கேள்விகளுக்கு சற்றும் தயக்கமில்லாமல் துணிச்சலுடன் பதில் அளித்தார். இந்த நிலையில் பல காத்திரமான கேள்விகளுக்கு இடையே ஜன நாயக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோ லாஃப்கிரின் சுந்தர் பிச்சையிடம், "அமெரிக்காவில் சமீபத்தில் அதிகம் தேடப்படும் வார்த்தையாக முட்டாள் (idiot) இருக்கிறது. அந்த வார்த்தையை கூகுளில் தேடும்போது ஏன் அதிபர் ட்ரம்பின் படம் காட்டுவது ஏன்?"என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு சுந்தர் பிச்சை பதிலளிக்கும்போது, "இதில் கூகுளுக்கு எந்த உள்நோக்கமும் இல்லை. கூகுளில் நீங்கள் ஒன்றை தேடினால் லட்சணக்கான பயன்பாட்டாளர்கள் அதற்கு எந்த கீ வேர்டை பயன்படுத்துகிறார்களோ அதன் அடிப்படையில்தான் உங்களுக்கான முடிவை காட்டும். சில நேரங்களில் இது பிரபலங்களின் அடிப்படையிலும் முடிவை காட்டலாம். எனவே இதற்காக உங்கள் போன் பின்னால் சிறிய நபர் அமர்ந்துகொண்டு நீங்கள் தேடுவதற்கான முடிவை அவர் காட்டுகிறார் என்று அர்த்தமில்லை. உங்கள் தொலை பேசியை கூகுள் உருவாக்குவதில்லையே" என்றார்.

# சுவிட்சர்லாந்தில் இராணுவத்தின் தலைமைப் பொறுப்பிற்கு முதல்முறையாக பெண் நியமனம்



சுவிட்சர்லாந்து ஏழு உறுப்பினர் நிர்வாகக் குழுவிற்கு இரண்டு பெண்கள் தேர்வு செய்யப் பட்டுள்ள நிலையில் அவர்களில் ஒருவரான வயோலா அம்ஹெர்டு 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் ஃபெடரல் பாதுகாப்புத் துறை சிவில் பாதுகாப்பு மற்றும் விளையாட்டுத் துறையின் தலைமைப் பொறுப்பை ஏற்க இருக்கிறார். இந்தப் பொறுப்பிற்கு ஒரு பெண் தேர்ந்தெடுக்கப்படுவது சுவிட்சர்லாந்து வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

# 58 மில்லியன் வீடியோக்களை 3 மாதத்தில் யூடியூப் நிறுவனம் நீக்கியது ஏன்?

பெண்கள், குழந்தைகளை ஆபாசமாக சித்தரிக்கும் மற்றும் வன்முறையைத் தூண்டும் பேச்சுக்களைக் கொண்ட மோசமான வீடியோக்கள் வெளியாவதை முழுமையானத் தடுக்க வேண்டும் என பல்வேறு நாட்டு அரசாங்கங்கள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால், இப்படியான வீடியோக்களை நீக்கவோ, முழுமையாக தடுக்கவோ யூடியுப்பால் முடிவதில்லை. ஆனாலும் வீடியோக்களை ஆராய்ந்து நீக்குவதற்காக ஏராளமான பணியாளர்களை யூடியூப் நியமித்துள்ளது.

யுடியுப்பின் விதிகளை ஏதேனும் ஒரு வீடியோ மீறினால் உடனடியாக அந்தச் சானலுக்கு 'ஸ்ட்டிரைக்' அனுப்பப்படும். இது எதற்காக அனுப்பப்பட்டது என ஆராய்ந்து அந்த சனல் உரிமையாளர் மீண்டும் அதே தவறைச் செய்யாமல் இருக்க வேண்டும். மீண்டும் விதிகளை மீறினால் இரண்டாவது ஸ்டிரைக் அனுப்பப்படும் இவ்வாறு 90 நாட்களுக்குள் ஒரு யூடியுப் சனல் மூன்று ஸ்ட்டிரைக்குகளை வாங்கிவிட்டால் அந்த சனல் முழுமையாக யூடியூப்பிலிருந்து நீக்கப்படும். இவ்வாறு நீக்கப்படும்போ அந்தச் சானலில் உள்ள அனைத்து வீடியோக்களும் அழிக்கப்பட்டு விடும். இந்நிலையில் இவ்வருடத்தின் மூன்றாம் காலாண்டில் அதாவது ஜூலை முதல் செப்ரம்பர் மாதம் வரைக்கும் யூடியுப்பில் விதிகளை மீறிய 7.8 மில்லியன் வீடியோக்கள் அங்கிருந்து நீக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை ஸ்பேம் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நீக்கப்பட்ட வீடியோக்கள் சனல்கள் என்பவற்றின் விவரத்தை வெளியிட்டது இதுவே முதல்முறை.



# மியான்மருக்கு எதிராக அமெரிக்காவில் தீர்மானம்

'மியான்'மரில் ரோகிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த தாக்குதல் இனப்படுகொலை என அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. இத் தீர்மானத்திற்கு ஆதரவாக 394 பேரும் எதிராக இருவரும் வாக்களித்தனர். இதனால் இத்தீர்மானம் நிறைவேறியது.

மியான்மர் நாட்டின் வடக்கு ராகினி மாகாணத்தில் ரோகிங்யா முஸ்லிம்களுக்கும் புத்த மதத்தினருக்கும் இடையே கடந்த 2016ம் ஆண்டு அக்ரோபர் மாதம் மோதல் ஏற்பட்டது. இது பின்னர் பாதுகாப்புப் படையினருக்கும் ரோகிங்யா முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதலாக மாறியது. 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ரோகிங்யா மக்கள் அடித்து விரட்டப்பட்டனர். இவர்கள் வங்கதேசத்திலிருந்து வந்து குடியேறியவர்கள் என்பதால் மீண்டும் வங்கதேசத்துக்கே அகதிகளாகச் சென்றுள்ளனர். இவர்கள் இந்தியாவிலும் அகிதிகளாக உள்ளனர். இவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை 'இனப்படுகொலை' என குறிப்பிட மியான்மர் அரசு தவறிவிட்டது என அமெரிக்கா அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத் தீர்மானம் குறித்து அமெரிக்க நாடாளுமன்ற வெளியுறவுத்துறை குழுத் தலைவர் எட்ராஸ்ஸ் குறிப்பிடுகையில் ரோகிங்யா முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை இனப்படுகொலை என அழைக்க அமெரிக்காவுக்கு தார்மீக கடமை உள்ளது. இதை செய்ய தவறினால் இந்தக் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்படாமல் தப்பி விடுவார்கள். மேலும் மியான்மருக்கு பொருளாதாரத் தடை மட்டுமல்லாது, அதிக அழுத்தத்தையும் அமெரிக்க அரசு கொடுக்க வேண்டும் என்றார்.

# கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி

கஜா புயலால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு நன்றை கிடைக்கும் அளவிற்கு நிதி அளிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.



கஜா புயலால் கடுமையான பாதிப்புகளைச் சந்தித்த தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட 12 மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதால் பொதுமக்கள் வீடுகள், நிலங்கள் என தமது வாழ்வாதாராங்களை இழந்து தவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மக்கள் 17,500 பேருக்கு நன்மை பயக்கும் வகையில் நிதியுதவி அளிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. இந்த நிதியுதவி பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெருமளவில் நன்மை பயக்கும் என கருதப்படுகிறது.

## போரிடும் பணியை பெண்களுக்கு கொடுக்க முடியாது இந்திய ராணுவத் தளபதியின் கருத்தால் குழப்பம்

சர்வதேச செய்தி சேவைக்கு பேட்டியளித்த இந்திய ராணுவத் தளபதி பிபின் ராவத், இந்திய ராணுவ வீரர்கள் பெரும்பாலானோர் கிராமங்களில் இருந்து வந்தவர்கள். அவர்கள் பெண் கமாண்டர்களை ஏற்பது கிடையாது. எனவே சண்டையிடும் பணிக்கு பெண்கள் தயாரில்லை. போரில் பெண்கள் உயிரிழக்க நேரிடும். இதனை எதிர்கொள்ள இந்திய குடும்பங்கள் தயாராக இல்லை.

பெண் வீரர்களின் உடல்கள் போர்முனையிலிருந்து வருவதையும் பார்க்க அவர்கள் தயாராக இல்லை. பெண்களுக்கு ஆறு மாத கால மகப்பேறு விடுப்பை ராணுவம் வழங்க முடியாது. விடுப்பு மறுக்கப்பட்டாலும் பெரும் கொந்தளிப்பு நேரிடும். போர் முனையில் 100 ராணுவ வீரர்களுக்கு மத்தியில் பெண்கள் பணியாற்ற நேரிடும். பின்னர் உடைமாற்றும் போது எட்டிபார்த்தார்கள் என்ற புகாரெல்லாம் வரும். யாரோ எட்டிபார்க்கிறார்கள் என்பார்கள், நாங்கள் அவருக்கு பாதுகாப்பு அரண் அமைக்க வேண்டியது இருக்கும் என்று கூறியுள்ளார். அவருடைய இப்பேச்சு டுவிட்டரில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தென்னை மரங்களுக்கு விவசாயிகள் 30ஆம் நாள் அஞ்சலி




கஜ புயலால் தென்னை மரத்தை இழந்த பட்டுக்கோட்டை விவசாயிகள் நேற்றைய தினம் ஒன்றுக்கூடி 30ஆம் நாள் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

30 நாட்கள் கடந்த நிலையிலும், விழுந்த தென்னை மரங்களை அகற்ற முடியாமல் விவசாயிகள் தவித்து வருவதாகவும், பட்டுக்கோட்டை, பேராவூரணி உள்ளிட்ட பகுதியை சேர்ந்த தென்னை விவசாயிகள் காசாங்குளத்தில் ஒன்று கூடி இந்நிகழ்வில் கலந்து கொண்டதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாங்குளத்திலிருந்து நகரின் முக்கிய வீதி வழியாக பேரணியாக சென்ற விவசாயிகள், விழுந்த தென்னை மரங்களை அரசே அகற்ற வேண்டும் என்றும், கூடுதல் நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்ததாக அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# அணையா நெருப்பு அப்துல் ரவூப்க்கு வீரவணக்கம்

1995 ஆம் ஆண்டு யாழ்பாண நகரை இலங்கை ராணுவம் ஆக்கிரமித்தால் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் மண்ணைவிட்டு அகதிகளாக வெளியேறியதோடு சர்வதேச நாடுகளில் தஞ்சமடைந்தனர்.



இந்தநிலையைக் கண்டும் தமிழகத்தில் தமிழீழ் உணர்வாளர்கள் என்ன செய்வது என்றறியாதபோது தனது மரணத்திற்கு நேரம் குறித்து களமாட புறப்பட்ட ஒப்பற்ற மாவீரனே அப்துல் ரவூப் என்ற 24வயது இளைஞன். தமிழகத்தில் சகோதேர சமூகத்தில் பிறந்த அப்துல் ரவூப் என்ற இளைஞன் தன் உடலில் தீயிட்டு தன்னை ஆகுதி ஆக்கியதன் மூலம் தமிழீழத்திற்கு அப்பால் அன்னிய மண்ணில் முதல் முறையாக உயிர் தியாகம் செய்து உலகத் தமிழர்கள் மனங்களில் இடம்பிடித்தார்.

1971—ல் பெரம்பலுரா் மாவட்டத்தில் லப்பைக் குடிக்காடு என்ற சிறிய கிராமத்தில் அசன் முகம்மது, சௌதா என்ற பெற்றோர்களுக்கு மகனாக அப்துல் ரவூப் பிறந்தார். இவர் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்கியதோடு மனிதநேயம் மிக்கவராகவும் இருந்ததோடு இவரும் இவரது குடும்பத்தினரும் ஈழத்தமிழர்கள் மீது அன்போடும் இருந்து வந்தனர்.

ஈழத்தில் மக்கள் மீது கொடூர தாக்குதல் நடந்து கொண்டிருந்த நேரத்தில் தமிழ்நாட்டின் தலை நகர் சென்னையில் தெற்காசிய விளையாட்டு போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு சிங்கள விளையாட்டு வீரர்கள் சென்னை வருவதை அறிந்த தமிழக மக்கள் கொதித்துக் கொண்டிருந்தனர். அந்த நாட்களில் தினமும் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், என கலந்து கொண்டிருந்த அப்துல் ரவூப் ஓர் தீர்க்கமான முடிவை எடுத்தார்.

1995—டிசம்பர் 15 அன்று காலை 7.30 மணிக்கு தன் உடல் முழுவது மண்ணென்னையை ஊற்றிக் கொண்டு தன் கடையில் முன் வைக்கப்பட்டிருந்த பெயர் பலகை மற்றும் அச்சிட்டு துண்டறிக்கையிலும் "ஈழத்தமிழர்களுக்காக போராடுங்கள் இல்லை என்றால் போரிட வைத்து விடுவார்கள் ஈழத்தமிழர்களை காப்பாற்றுங்கள், ஈழத்தமிழர்கள் கொல்லப்படும் போது தெற்காசிய விளையாட்டுப் போட்டி ஒரு கேடா? தெற்காசிய விளையாட்டு போட்டிக்கு சிங்களத்தின் விளையாட்டு அணி தமிழகத்திற்கு வருவதா?" என்று எழுதியிருந்தார். கடைக்கு அருகில் இருக்கும் பெரியார் சிலைக்கு சென்று முழக்கமிட்டு தீ மூட்டிக்கொண்டார்.

உடல் முழுவதும் கருகி உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த நேரத்தில் இவர் அளித்த மரண வாக்குமூலத்தில் "ஈழத்தமிழர்களுக்காக போராடுங்கள் இல்லை என்றால் போரிட வைத்து விடுவார்கள் " ஈழத்தமிழர்களை காப்பாற்றுங்கள், நான் எந்த கட்சியையும் சார்ந்தவன் அல்ல" என்றும் தெளிவாக பதிவு செய்துவிட்டு நம் மனங்களில் அணையா தீயை பற்றவைத்து அணைந்து போனார். இவர் இறந்து 23 ஆண்டுகளில் முத்துக்குமார் உட்பட தமிழீழ மக்களின் விடுதலைக்க இதுவரை 18பேர் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். எதிரியும், துரோகியும் ஒரே வரிசையில் அப்படியே நின்று கொண்டிருக்கின்றனர். ஏராளமான இழப்புகளை தாங்கி, தமிழீழம் என்ற தெளிவான இலக்கும் அப்துல் ரவூப் அவர்களின் நினைவுகளும், கனவும் நம்மை இடைவிடாது இயக்கி கொண்டிருக்கிறது.

8ம் பக்க தொடர்ச்சி

கேட்டபோது, "ஒரு பணியாளருக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என்றாலோ, தரக்குறைவாக நடத்தப்பட்டாலோ அல்லது வேறெதாவது பிரச்சனை இருந்தாலோ அவருக்கு உதவி புரியும் வகையில் துபாயில் சட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும், அவற்றை அணுகி நீதியை நிலைநாட்டுவதற்கு செலவிட வேண்டிய பணம், நேரம் ஆகியவற்றை கருதி தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை பொறுத்துக்கொண்டு இந்தியர்கள் பணியாற்றுகிறார்கள்" என்று அவர் மேலும் கூறுகிறார்.

பணியிடத்தில் நடத்தப்படும் விதமும், காலநிலையும் இங்கு பணிபுரியும் பலரை சொந்த ஊரை நோக்கி இழுத்தாலும், தங்களது குடும்பத்தின் எதிர்காலத்தை எண்ணி தொடர்ந்து பணிபுரிபவர்கள் ஒரு கட்டத்தில் நோய்வாய்ப்பட்டோ அல்லது தற்கொலை செய்துகொண்டோ இறக்கும் நிலைக்கு தள்ளப்படுவதாக மது ரஞ்சனி கூறுகிறார்.

"கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக துபாயில் பணிபுரிந்து வரும் எனக்கு, இதுவரை எவ்விதமான பிரச்சனையும் ஏற்படட்டதில்லை. துபாயில் ஆண்களைவிட, பெண்கள் எழுப்பும் பிரச்சனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. உதாரணத்துக்கு, பெண்ணொருவரை தெரியாமல் இடித்துவிட்டால் மன்னிப்பு கோர வேண்டும். இல்லையெனில், அதை பிரச்சனையாய் எழுப்பும்பட்சத்தில் அந்த ஆண் அதிகபட்சமாக நாடு கடத்தப்படுவதற்கு கூட வாய்ப்புள்ளது" என்று மது கூறுகிறார்.

ஆனால், பொதுவாக இரவு நேரத்தில் வெளியில் அதிகம் செல்லாத தான், ஒருமுறை நண்பர்களுடன் சென்றபோது அதிர்ச்சியடைந்ததாக அவர் கூறுகிறார். "பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் சாலைகளிலேயே பளீச்சென ஆடைகளை உடுத்திக்கொண்டு நிற்பதும், அவர்களை கார்களில் வரும் முன்பின் தெரியாதவர்கள் சர்வசாதாரணமாக அழைத்துச்செல்வதையும் பார்த்தபோதுதான் துபாயில் தடை செய்யப்பட்ட பாலியல் தொழில் கொடிகட்டி பறப்பது அதிர்ச்சியடைய வைத்தது. எனவே, குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு வெளியில் சென்றால் எந்த பெண் வேண்டுமானாலும், பிரச்சனையில் சிக்குவதற்கு வாய்ப்புள்ளதாக நான் எண்ணுகிறேன்" என்று அவர் கூறுகிறார்.

சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் கையூட்டு கொடுத்து தந்தையின் உடலை அவர் இறந்து 43 நாட்களுக்கு பின்பு கொண்டு வந்தோம்

"சுமார் இருபத்தைந்து வருடங்களாக சௌதி அரேபியாவில் பணிபுரிந்த எனது தந்தை இரண்டாண்டுகளுக்கு முன்பு அங்கேயே மாரடைப்பால் இறந்துவிட்டார். நடுத்தர குடும்பத்தை சேர்ந்த நாங்கள் எங்களது தந்தையின் உடலை தமிழகத்திற்கு கொண்டுவருவதற்கு பல்வேறு மத்திய, மாநில அரசுத்துறைகளை அணுகியும் எவ்வித பலனும் அளிக்காததால் சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் கையூட்டு கொடுத்து தந்தையின் உடலை அவர் இறந்து 43 நாட்களுக்கு பின்பு கொண்டுவந்தோம்" என்று தனது மோசமான அனுபவத்தையும் விளக்குகிறார்.

# விமானத்தில் மனித இதயம் அவசரமாகத் தரையிறக்கிய விமானிகள்

அமெரிக்காவில் விமானம் ஒன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மனித இதயத்தால் பரபரப்பு ஏற்பட்டு இருக்கிறது. இதனால் அந்த விமானம் வந்த இடத்திற்கே திரும்ப அனுப்பப்பட்டுள்ளது.




இதய மாற்று அறுவை சிகிச்சை பெறப்பட்ட இதயங்களை மருத்துவமனைக்கு சரியான நேரத்தில் கொண்டு செல்வது மிகவும் கடினம். அப்படி ஒரு இதயம் நோயாளி ஒருவருக்காக கொண்டு செல்லப்பட்டபோது பெரிய குழப்பம் ஏற்பட்டு இருக்கிறது. அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இருந்து வாஷிங்டனில் உள்ள சியாட்டல் விமான நிலையத்திற்கு சவுத்வெஸ்ட் விமானம் மூலம் பாதுகாப்பாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஆனால் இந்த இதயம் விமானம் தரையிறங்கிய பின் பார்சல் அலுவலகத்திற்கு கொண்டுவரப்படவில்லை. இந்த இதயம் விமானத்திலேயே கைவிடப்பட்ட நிலையில் இருந்துள்ளது. அதன்பின் அந்த விமானம் டெக்சாஸில் உள்ள டல்லாஸ் விமான நிலையத்தில் புறப்பட்டு இருக்கிறது. பாதி தூரம் சென்றபின்தான் விமானிகளுக்கு தகவல் தரப்பட்டது. இதயம் ஒன்று உள்ளேயே தவறுதலாக விடப்பட்டிருக்கிறது எனத் தெரியவந்துள்ளது. இதையடுத்து விமானம் மீண்டும் சியாட்டல் நோக்கி திரும்பிச் சென்றது. மொத்தம் 4 மணி நேரம் பயணம் செய்து விமான நிலையத்திற்குச் சென்றது. விமானத்திற்குள் இருந்து இதயம் பாதுகாப்பாக போதிய மருத்துவ முறைகளின்படி முத்திரை இடப்பட்டிருந்தது. இதனால் பயணிகள் பலர் கவலை அடைந்தனர்.

## பேசும் சுவர்!

உங்கள் அறையின் சுவர் காலையில் உங்களுக்கு ஹலோ சொன்னால் எப்படியிருக்கும்? கார்னகிமெலன் பல்கலைக்கழகமும் டிஸ்னி ஆராய்ச்சியகமும் உருவாக்கியிருக்கும் கருத்து இதுதான். எலக்ட்ரோட்—லேடன் கோட்டிங் மூலம் சுவரை உயிருள்ளதாக மாற்றும் ஆராய்ச்சி இது. சுவரில் மனிதர்களின் தொடுதலை உணர்ந்து கொள்ளவும், கருவிகளை இயக்கச்செய்யவுமான ஆராய்ச்சியாளர்களின் நெடுநாளைய கனவு இது. டையமண்ட் வடிவில் எலக்ட்ரோடுகளை வைத்து சுவரில் இரண்டு கோட்டிங் லேடக்ஸ் பெயிண்டை பூசினால் போதும்.

ஐபோனின் டச் ஸ்க்ரீன்போல சுவர் மாறுவதால், இதிலிருந்து லைட்டுகளை ஆன் செய்து ஆஃப் செய்யலாம்."அறையிலுள்ள பெரும்பான்மையான பரப்பான சுவரை பயன்படுத்துவதற்கான முயற்சி இது. எதிர்காலத்தில் இது முக்கியமான கண்டுபிடிப்பாக மாறும்" என்கிறார் ஆராய்ச்சியாளரான கிறிஸ் ஹாரிசன்.

## கடல்வாழ் உயிரினங்களை அழிக்கும் மர்ம ஒட்டுண்ணி!

பிரான்ஸ், இத்தாலி, மால்டா, சைப்ரஸ் ஆகிய நாடுகளிலுள்ள கடல்வளங்களை ஒட்டுண்ணி கபளீகரம் செய்ய தொடங்கியுள்ளது. குறிப்பாக சிப்பிகளை. சிப்பிகளை காக்கும் விதமாக ஐரோப்பிய யூனியன் சட்டம் போட்டும் இதனை உணவுக்காகவும், அலங்காரப்பொருட்களை செய்வதற்காகவும் வேட்டையாடி வந்தனர்.இது ஒருபுறம் சிப்பிகளின் எண்ணிக்கை குறைத்தது என்றால் தற்போது ஒட்டுண்ணிகளின் போர் தொடங்கிவிட்டது.

முதுகெலும்பற்ற உயிரியான பென் ஷெல், நீரினை குறிப்பிட்ட முறையில் சுத்திகரிப்பதோடு இதன் உடலிலிருந்து பெறும் இழைகளை கடல் பட்டு என்று அழைக்கின்றனர். ஒட்டுண்ணிகள் மட்டுமே சிப்பிகளின் அழிவுக்கு காரணம் என்று சொல்வது, தீவிரவாதத்திற்கு இந்திய முஸ்லீம்கள்தான் காரணம் என்று சொல்வதைப்போல பெரும் பொய்யாகவே தெரியும். ஐரோப்பிய யூனியனின் தடை சட்டத்தை அவர்களும்



கறாராக நடைமுறைப்படுத்தவில்லை. இதன் விளைவாக மாசுபடுதலால் எண்ணிக்கை பெருமளவு சரிந்த சிப்பிகள் ஒட்டுண்ணிகளின் நுட்பமான தாக்குதலால் அழிவை நோக்கி நடைபோட்டு வருகின்றன. 2016 ஆம் ஆண்டு மத்திய தரைக்கடலில் ஒட்டுண்ணியை முதன்முதலில் ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர். ஆனாலும் அது தாக்கும் விதம் பற்றி ஏதும் தெரியவில்லை. சிப்பியின் செரிமான இயக்கத்தை முதலில் தாக்கும் ஒட்டுண்ணிகள் சிப்பியை முழுமையாக மூட முடியாமல் செய்கின்றன. தாக்குதலின் முதல் நிலை இதுவே.

"தாக்குதலின் விளைவாக ஸ்பானிய கடல்பகுதியில் பென்ஷெல்கள் காணாமல் போய் விட்டன" என்கிறார் இன்டர்நேஷனல் நேச்சர் கன்சர்வேஷன் யூனியன் அமைப்பைச் சேர்ந்த ஆய்வாளர் மரியா டெல் மர் ஒட்டேரோ. கடல்வளங்களை ஒட்டுண்ணி அழிப்பதை பல்வேறு நாடுகளில் நடக்கும் நிகழ்வுகளிலிருந்து கண்டுபிடித்த ஆய்வாளர்கள், ஒட்டுண்ணியின் உடல் அமைப்பை கண்டுபிடிப்பது முதல் அதனை தடுப்பது வரை பெரியளவு நடவடிக்கையில் இறங்கவில்லை என்பது வேதனையான உண்மை. தொற்றுநோய் போல வேகமாக துருக்கி, கிரீஸ் என பல்வேறு நாடுகளிலும் ஒட்டுண்ணி பரவிவருகிறது. ஒட்டுண்ணிக்கு தாவரங்களின் உடல்கள் குறிப்பிட்ட காலம் மட்டும் தேவை என்று அழித்துவிட்டு அடுத்தடுத்த உயிருக்கு தாவி நகர்வது கடல் ஆராய்ச்சியாளர்களை மிரட்டியுள்ளது. ஏனெனில் அதன் வலிமை நாளுக்குநாள் அதிகரித்து வருவதுதான்.

## 6.3 கோடிக்கு ஏலம்போன நிலா கற்கள்

சோவியத் விண்வெளி சாதனைகளின் பிரம்மாவான செர்ஜிகோரலேவ் என்பவர் 1966ல் வெளியுலகம் அறியப் படாமலேயே இறந்தார். அவரை கௌரவிக்க அவரது மனைவி மீ நினா இவானோவ்னா கோரலேவாக்கு 1970ல் சோவியத் யூனியன் நிலாவில் தரையிறக்கிய லூனா, 16 என்ற ஆளில்லா விண்கலம் நிலாவின் மண், கற்களை எடுத்து பூமிக்கு ராக்கட் மூலம் அனுப்பியது. இதிலிருந்து 200 மில்லிகிராம் நிலா கற்களை பரிசளித்தது. அதில் மூன்று கற்களை அண்மையில் நியூயார்க் நகரில் ‘சோதேபிஸ்’ என்ற நிறுவனம் ஏலம் விட்டபோது, அது 6.3 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது.



## யானைகளின் சாணத்திலிருந்து காகிதம் தயாரிப்பு



யானைகளின் சாணத்தின் மூலம் காகிதம் தயாரிக்கும் திட்டத்தை தமிழக இந்து அறநிலையத்துறை தொடங்கியிருக்கிறது. யானையின் சாணத்தில் அதிகமான நார்ச்சத்து இருப்பதால் அதை சுத்திகரித்து அதன்மூலம் காகிதம் தயாரித்து எளிதாகப் பயன்படுத்த முடியும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதாவது யானையின் சாணத்தில் அதிகளவிலுள்ள நார்ச்சத்து உள்ளது. காகிதம் தயாரிக்கும் மூலப் பொருட்களுக்கு இந்த சாணம் ஏற்றது என ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது சாணத்திலிருக்கும் நார்ச்சத்துக்களை மட்டும் தனியாகப் பிரித்து காகிதம் தயாரிக்கப் பயன்படுத்தவுள்ளது. இதற்கான தொழில்நுட்ப வசதிகளும் உள்ளதாக குறிப்பிடுகின்றனர்.

# இலங்கை படைகள் உள்ள முகாம்கள் அனைத்தும் சர்வதேச கண்காணிப்புடன் அகழப்படவேண்டும்!

## ஈழத்தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் அனந்தி சசிதரன் சிறப்புப் பேட்டி

இலங்கை அரச படைகள் நிலை கொண்டுள்ள முகாம்கள் அனைத்தும் சர்வதேச கண்காணிப்புடன் அகழப்படவேண்டும் என தெரிவித்துள்ள ஈழத்தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன், அதன் ஊடாக பல உண்மைகள் வெளிக்கொண்டுவரப்படும் சூழல் உருவாகும் எனவும் தெரிவித்துள்ளார். அவருடன் மேற்கொண்ட நேர்காணலின் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

**மன்னார் புதைகுழி விவகாரம் தொடர்பாக எம்மக்கள் எவ்வித கருத்துக்கொண்டிருக்கின்றனர்? இவ்விடயத்தை நாம் எவ்வாறு அணுக வேண்டும்? இவ்விடயத்தில் உயிரிழந்தவர் களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்குமான மனித உரிமைகளை நிலைநாட்ட நாம் என்ன செய்ய வேண்டும் எனும் தங்கள் கருத்தை கூற முடியுமா?**

தமிழர்கள் என்ற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் எமது மக்கள் காணாமல் ஆக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்கள். ஆனால் அண்மையில் மன்னார் புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் மிக பயங்கரமான சம்பவங்களை சந்தேகிக்க வைக்கிறது. குழந்தைகள் கொல்லப்பட்டு புதைக்கப் பட்டுள்ளார்கள் இது மிகவும் கொடூரமானது. அதாவது காலில் இரும்புச்சங்கிலி பேர்டப்பட்டவாறு எலும்புக்கூடு மீட்கப் பட்டதென்பது கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதாகவே நாம் பார்க்கிறோம்.

அத்துடன் அனைத்து எலும்புக்கூடுகளும் ஆடைகள் இல்லாமல் இருந்ததாகத் தான் அறியமுடிகிறது. இதிலிருந்து அவர்கள் சித்திர வதைக்குள்ளாக் கப்பட்டுள்ளார்கள் என்றே எம்மால் ஊகித்துக்கொள்ள முடிகிறது. 1990க்கு பிற்பட்ட காலப்பகுதியில் எமது மக்கள் பலர் காணமல் போயுள்ளார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என இன்று வரை எமக்குத் தெரியாது. தமது உறவுகளை பறிகொடுத்த ஒவ்வாருவருவருக்கும் தமது உறுவினார்களுக்கு என்ன ஆனது என தெரியாத நிலையில் இந்த புதைகுழிகள் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. இலங்கை அரச படைகள் சித்திரவதைக்கு பெயர் போனவர்கள். அவர்கள் எமது மக்களை கொன்றொழித்து ஜனநாயகத்துக்கு விரோத மாக தொழிற்பட்டவர்கள். எனவே இந்த விடயத்தில் சர்வதேச ஆய்வாளர்கள் கொண்டுவரப்படவேண்டும் என்பதுடன் முழுமையான ஆய்வுக்குட்படுத் தப்படவேண்டும்.

**இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐநா வரை சென்று குரல் கொடுத்து வருகின்றீர்கள். உங்களைப் போன்றவர் களின் முயற்சிகளுக்கு காத்திரமான பலன் கிடைத் திருக்கின்றதா?**

இல்லை. இறுதிப்போரில் நாம் பாதிக்கப் பட்ட தரப்பாக உள்ளோம். போரின் கோரக் காட்சிகளை நேராகப் பார்த்தும் எனது கணவரை அரசிடம் ஒப்படைத்ததுக்கும் சாட்சியாக நான் உள்ளேன். இந்த நிலையில் நான் போரின் சாட்சியாக மட்டுமல்லாமல் மக்கள் பிரதிநிதியாகவும் உள்ளேன். ஆனால் எம்மை ஒரு தரப்பாக ஏற்றுக்கொள்ளாமல் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் கருத்துக்களையே சர்வதேசம் எற்றுக்கொள்கிறது. எமது கருத்துக்கள் முழுமையாக பதியப்படவில்லை. எமது கருத்துக்களை செவிமடுப்பதற்கு ஐநா தயாரில்லை.ஒருஇனவிடுதலைபோராட்டத்தில் பங்குகொண்ட போராளிகள் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டு நடக்க வண்டிய அரசு இவை இரண்டையும் சம தராசில் வைத்து பார்ப்பதே ஐநாவின் அடிப்படை பிரச்சனையாகவுள்ளது. அது மாற்றப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகள் உலகத்திலேயே மிக ஒழுக்கமுள்ள போராளி இயக்கமாக வளர்த்தெடுக்கப்பட்ட இயக்கம். இதில் விடுதலைப் புலிகளையும் அரசையும் அவர்களின் குற்றங்களை சம தராசில் வைத்துப் பேசுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

போர்க்குற்றத்தை இழைத்த அரசை ஒரு தரப்பாக ஏற்றுக்கொண்டதுடன் எம்மை வெறும் சாட்சியாகத் தான் உள்ளெடுத்துள் ளார்களே தவிர எம்மை ஒரு தரப்பாக உள்வாங்க அவர்கள் தயாராகவில்லை. எம்மை சாட்சியாக மட்டும் வைத்து எவ்வாறு எமக்கு நியாயத்தை வழங்க இவர்களால் முடியும் என்பது கேள்வியாகவுள்ளது. இந்தநிலையில் நாம் மீண்டும் சர்வதேசத் துக்கு அழுத்தம் கொடுத்து வருகிறோம். ஆனால் இலங்கையை போற்குற்றத்தில் இருந்து காப்பாற்றுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு மிக சாதுரியமாக விடயங்களை நகர்த்தி வருகிறது.

சர்வதேச விசாரணையை வேண்டிய எம்மை கலப்பு பொறிமுறைக்குள் கொண்டு வந்துள்ளார்கள். குற்றம் செய்தவர்களே எம்மை விசாரணை செய்ய முற்படுவது என்பது மிக மோசமான நிலமை. எமக்கான நீதியையும் இழப்பீட்டையும் அவர்களே தீர்மானிக்கிறார்கள். அது நீதிக்குப் புறம்பான செயற்பாடாக கருதுகிறோம். இந்த மனநிலை மாற வேண்டும். ஒரு அரசை நம்பி நம்பிக்கையாக கொடுக்கப்படும் பொருள் திரும்ப கொடுக்கப் படவேண்டும். அவ்வாறுதான் அரசை நம்பி எமது உறவுகளை கையளித்தோம். ஆனால் அரசு கொள்ளையர்கள் போல நடந்து கொள்கிறது. இறுதிப் போரில் சரணடைந் தவர்களுக்கு என்ன நடந்தது என 10 வருடங்களாக அரசு பதில் தரவில்லை. இது தொடர்பில் இடித்துரைப்பதற்கு ஐநா தயாராகவும் இல்லை. இந்த விடயத்தில் எமது தலமைகள் நூறு சதவீதமும் அழுத்தத்தை கொடுக்கவில்லை. மனித உரிமை தொடர்பான தாக்கத்தை சில நாடுகளில் ஏற்படுத்தியுள்ளது. ஆனால் சர்வவேத விசாரணை சர்வதேச மத்தியஸ்த் துடன் கூடிய தீர்வுத்திட்டம் வேண்டும் என தொடர்சியாக குரல் கொடுத்து வருகிறோம். வடக்கு மாகாணசபையில் ஒரேயொரு பெண் உறுப்பினராகவும் அமைச்ச ராகவும் இருந்துள்ளீர்கள் தற்போது புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளீர்கள் இந்த நிலையில் பொதுமக்களின் பிரச்சனைகளை வெளிக் கொண்டு வரும்போது ஒரு பெண்ணாக நீங்கள் எதிர்கொண்ட சவால்களை சுருக்கமாக பகிர்ந்து கொள்வீர்களா? இலங்கையில் தமிழ் பெண்களின் அரசியல் பிரவேசம் தொடர்பாக உங்கள் கருத்து மற்றும் ஆலோசனை என்ன?

உணர்வுப்பூர்வமாக மக்கள் எனக்கு வாக்களித்தார்கள். அதற்கான கடமையை நான் செய்து வருகிறேன். தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒரு பெண்ணாக இருந்ததால் அரசியலில் நேர்மையற்றவர்களாலும் காழ்ப்புணற்சியும் ஆணாதிக்க சிந்;தனை கொண்டவர்களாலும்; தொடர்ந்து நெருக் கடிகளைச் சந்தித்தேன். சில மாகாண சபை உறுப்பினர்கள் ஆறுதலாக இருந்தார்கள். பல சவால்களை எதிர்கொண்டேன். தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் பலர் நேராகவும் முகப் புத்தகம் ஊடாகவும் என்னை பற்றி மிகவும் அநாகரிகமான முறையில் எழுதினார்கள். பிரச்சாரம் செய்தார்கள். அவை அனைத்தும் தடைக் கற்களை தாண்டி என்னை கட்சி ஒன்றை ஆரம்பிக்கும் நிலைக்கு என்னைத் தள்ளியது.

**தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகள் கொள்கை நிலைப்பாட்டில் ஒருமைப்பட வேண்டிய தருணமொன்றில் புதிய கட்சியொன்றை தாங்கள் உருவாக்கியதன் நோக்கம் என்ன?**

வடக்கில் பெண்களின் குரலைவிட ஆணாதிக்க சிந்தனை மேலோங்கி இருந்ததால் புதிய கட்சியை எனது தலமையில் உருவாக்க வேண்டும் என்று எண்ணினேன். தமிழ் தேசிய கூட்டமைப்போ தமிழ் மக்கள் பேரவையோ வேறு கட்சிகளோ பெண்களுக்கு சம உரிமை வழங்கத் தயாராக இருக்கவில்லை. ஆண்களுக்கு கீழ்ப்படிந்து இருக்கும் சிந்தனையில் மட்டுமே செயற்பட்டார்கள் பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்களை உள்வாங்க தயாராக இருக்கவில்லை. எமக்கு என முதலுரிமை கோராவிட்டாலும் சம உரிமையை கொண்டுவர வேண்டும் என்ற நோக்கில்தான் இந்த கட்சியை உருவாக்கினேன். அரசியல் பிரவேசத்தின் பின்னர் பல நண்பர்கள் எனக்கு பக்கபலமாக இருந்தார்கள். தமிழ்நாடு, தாயகம், புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ் பற்றுறுதிகொண்ட பலர் எனக்கு ஆதரவாக இருந்தார்கள். இருக்கிறார்கள். அவர்களின் நல்வழிப்படுத்தல் தான் எமது கொள்கையில் தடம்புரளாமல் கொள்கைப்பற்றுடன் இருப்பதற்கு உதவியாக உள்ளது. எமது கட்சி எதிர்காலத்தில் நேர்மையாகவும் அழுக்கற்ற சுய ஒழுக்கம் கொண்ட தலைமை பண்பு கூடியவர்களை பதவிக்கு கொண்டு வந்து அரசியல் அரங்கில் வெற்றியாளர்களாக நாட்டுவது எமது கட்சியின் நோக்கம் ஆகும்.

**வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் தற்போது புதிதாக அமைத்துள்ள கூட்டணி தொடர்பில் உள்களது நிலைப்பாடு என்ன எதிர்காலத்தில் அவருடன் இணைந்து பயணிக்கும் எண்ணம் உள்ளதா?**



முதலமைச்சர் தலைமையிலான கட்சியும் எமது கட்சியும் கொள்கை ரீதியாக ஒன்றுபட்டவர்கள். கொள்கையுடன் ஒன்று பட்டவர்கள் அரசியல் களத்திலே இணைந்து செயற்படுவதில் எந்தத் தடையும் இல்லை.

**இலங்கையில் போர் இடம்பெற்ற போது இருந்த சர்வதேசத்தின் நிலைப்பாட்டுக்கும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைக்கு சர்வதேசம் காட்டியுள்ள முனைப்பு தொடர்பிலும் நீங்கள் எவ்வாறான வித்தியாசத்தை உணர்கிறீர்கள்? ஈழத் தமிழர்கள் சார்பாக என்ன கூற விரும்புகிறீர்கள்?**

தமிழர்களின் ஒரு தரப்பான தமிழீழ விடுதலைப்புலிகள் விடுதலைக்காக போராடினார்கள். விடுதலைப்புலிகளை அழிக்க வேண்டும் என போராடிய பல நாடுகள், தமிழர்களுக்கு தீர்வை தருவோம் என தெரிவித்து யுத்தத்தை மேற்கொண்டார்கள். விடுதலைப்புலிகளை மட்டுமல்ல பொதுமக்களையும் கொன்றொழித்தார்கள். பசப்பு வார்த்தைகளை கூறி 10 வருடங்கள் சென்றும் தீர்வைத்தரவில்லை. எம் மக்களை கொன்றொழித்தவனிடனே தீர்வை பெறுவதற்கு சர்வதேசம் எம்மை விட்டுள்ளது. இறுதி போரில் எம்மை எவ்வாறு கைவிட்டதோ அதே நிலை தான் தற்போதும் சர்வதேசம் எமக்கு செய்துள்ளது. ஆனால் தமது நாடுகளின் பூகோள நலனுக்காக இன்று இலங்கையில் பெரும் பாண்மை கட்சிகளிடையே ஏற்பட்ட குழப்பத்தில் தாம் நேரடியாக தலையிட்டு அந்த பிரச்சனையை தீர்த்து வைத்துள்ளார்கள். இந்த விடயத்தில் மிக தீவிரமான சர்வதேச நாடுகள் தமது ஆதிக்கதை நிலைநாட்டியுள்ளார்கள்.

அத்துடன் மிக முக்கியமாக தமது இனம் சிதறுண்டபோது காட்டாத தனது அக்கறை மற்றும் கரிசனையை சாணக்கியத்தை தனது இனம் கொன்றொழிக்கப்பட்டபோது ஓங்கி ஒலிக்காத குரலை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஏற்பட்ட பிரச்சனையை தீர்ப்பதற்காக கூறி தனது தள்ளாத வயதிலும் மிக காத்திரமான பணியை செய்துள்ளார்.

சர்வதேசமும் சரி தமிழ் தேசிய கூட்டமைப்பும் சரி தமது நலன் சார்ந்து செயற் பட்டுள்ளார்களே தவிர இந்த மண்ணில் ஒரு இனம் கொன்றொழிக்கப்பட்டதென்பதற்கு நீதியை பெற்றுக்கொடுக்க தயாராக இல்லை. எல்லா நாடுகளும் தமது அரசியல் நலன் சார்ந்த செயற்திட்டங்களை நிலைநாட்டியுள்ளார்கள்.